

24.07.94.

# வாழ்த்துச் செய்தி

## பரவுக!



சீர்சேர் கலைப்பை
செழுந்தேன் தமிழின்
மரபுணர்த்தி

ஏரைப்பிடித்தும்
எருதைத்
தொடர்ந்தும்
களம் உழுக

ஊரார் உளத்தின்
உயர்வை உலகர்
உணரவைக்கும்

பேரார் இகழாய்
பெருகிச் சொரிந்து
பரவுகவே!

களிர் ஒன்று எழுங்கால்
தமிழ் போல் பசுமை
படர்வது போல்

எழுமின் விழிமின்
எனச்சிட்னிச் செல்வத்
தமிழ் இளைஞர்

உள்ளங்கொள்
உணர்வால்
உலகில் கலைப்பை
உழுது வர

பழமை உணர்ந்தும்
புதுமை மலர்ந்தும்
பொலிவுறுமே!

அம்பி
பப்புவா நியூகினி

ஜூலை
1994

களம் 1
ஏர் 1

# கலப்பை

# KALAPPAI

மனித மனதை உழுகின்ற
"கலப்பை"
உலகத் தமிழர்தன்
உணர்வை
உயர்த்தி நிற்கும்.





**ஆசிரியர் குழு**

செல்வி கத்தூஜா தாவுது
திரு செ. பாஸ்க்கரன்
திரு கோ. செல்வநாதன்
திரு விசாகன் பொன்னம்பலம்
திரு கேதூஸ்வரன்
பொன்மயிலைநாதன்
செல்வி கோதை சங்கரலிங்கம்
செல்வி இந்துமதி வெங்கடாசலம்
திருமதி பாலம் லக்ஷ்மணன்

***வடிவமைப்பு***

திரு A. C. நேசகுமார்

**ஆண்டுச் சந்தா**
உள்நாடு :– Aus $ 10.00
வெளிநாடு :– Aus $ 15.00
தனிப்பிரதி :– $ 2.00

பிரசுரிக்கப்படாத படைப்புகள்
திரும்ப பெற இயலாது. படைப்புகள்,
சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

"Kalappai"
Sydney University Tamil Society
P.O.Box 40, Wentworth Bldg.,
University of Sydney NSW 2006
AUSTRALIA

தொடர்புக்கு
கத்தீஜா – (02) 516 3610
செல்வநாதன் – (02) 7451634



# உள்ளே...

## • சிறுகதை

ரகசிய ரணங்கள்....அருண் விஜயராணி
நான் என்ன சொல்ல....கோமதி
வெளிச்சம்.... முருகபூபதி

## • கட்டுரை

ஏன் இந்த மாற்றம்? ப.மோகன் -
தமிழ் மக்களின் நலன் கருதும் ஆராய்ச்சி
இருதய நோய்.DR. சிவகுமார்
"Question of Survival" - புட்டு

## • கவிதை

முகமிழந்த மனிதன் செ. பாஸ்க்கரன்
சிட்னியில் தமிழ் -வேந்தனார் இளங்கோ -


## • விமர்சனம்

பனி பெய்யும் இரவுகள் -
இப்படியும் ஒரு நெறியாளர் ? - இந்து

## கண்டதும் கேட்டதும்

அவுஸ்திரேலிய ஆதிக்குடிகளுடன்
ஓர் அனுபவம் - Dr. தவசூலன்





# ஆசிரியர் தலையங்கம்

EDITORIAL

## ஆசிரியர் குழு அறிமுகம்

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்!

இந்நாள் வரையும் சிட்னியில் இருந்து ஒரு தரமான சஞ்சிகை வரவேண்டும் என்ற உள்ளக் கிளர்ச்சி பலருக்கு இருந்து வந்தது. இம்முயற்சியில் இறங்க பலர் எண்ணியிருந்த போதும் சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் இம் முயற்சியை முன்னெடுத்து கலப்பை வெளியூட்டுப்பணியை எம் கைகளில் ஒப்படைத்துள்ளது.

பத்திரிகை உலகில் அறிவாலும், ஆற்றலாலும், அனுபவத்தாலும் நாம் மிகச் சாமான்யர்கள்தான், ஆயினும் உங்கள் கைகளில் தவளும் இந்தக் கலப்பையை முடிந்தளவு சிறப்பாகவும் தரமாகவும் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையோடு எமது கைகளை ஒருங்கிணைத்திருக்கின்றோம்.

ஒரு கை தட்டினால் ஓசை எழாது என்பதை நுங்கள் அறியாதவர்களல்ல, உங்கள் கைகளும் நிட்சயம் எமக்குத்தேவை. அவைதாம் எமது பலம். நுங்கள் கூறாமலே உங்கள் கைகள் இருக்கின்ற நம்பிக்கையில் தான் இந்தப்பொறுப்பை துணிந்து ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். எமது நம்பிக்கையைப் பாதுகாப்பதன மூலம் கலப்பை தன் வரலாற்றுப்பணியை சிறப்புற செய்வதற்கு வழிகோலும்.

*"கலப்பை" ஏனிந்தப்பெயரை தேர்ந்தெடுத்தோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்லுவோர்" உழவுத் தொழிலுக்கு கலப்பை அன்றோ பிரதான கருவி.*
*மனிதகுலத்தை வாழவைக்கும் பயிர்கள் செழிக்க கலப்பை கொண்டு உழுகின்றோம், அது மண்ணைக் கிளறி பண்படுத்துகின்றது. பண்பட்ட மண்ணில் பயிர்கள் செழிக்கின்றன. கலப்பை சஞ்சிகை உங்கள் எண்ணங்களைக் கிளறும், உள்ளங்களைப் பண்படுத்தும், அதை வளப்படுத்தும் பரந்துபட்ட தமிழன் பண்பட்டு வாழ பாடுபடும்.*
கலப்பை உங்களுக்காகவே உருவாக்கப்பட்டது தனியே செய்தியையும் சிறுகதைகளையும் கொண்ட அட்டைப்பெட்டியாக்க நாம் விரும்பவில்லை. திறந்த மனத்துடன் விவாதங்களை முன் வையுங்கள், கருத்துக்களால் மோதுங்கள், கருத்துமோதல்களுக்கு கலப்பை களமாக அமையும், மோதல் மோசமடையாமல் கருத்தாழமாக இருக்க நடுவில் நாங்கள் இருக்கின்றோம்.
ஆசிரியர் குழுவில் இருப்பவர்களே எல்லாவற்றையும் அறிந்தவர்கள், அவர்களே எல்லாவற்றையும் எழுதட்டும் என நினைத்துவிட முடியுமா? எமக்கு வெளியே எம்மைவிட அறிவாளிகள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடுதான் விவாதங்கள் பத்திரிகையில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன, விவாதங்களூடாகத்தான் கற்றுக் கொள்கின்றோம்.
கடைசியாக
எம்மை விமர்சியுங்கள், அது கலப்பையை தரமாக்கும், காண்பதை விமர்சியுங்கள் அது காட்சியின் தரத்தை உயர்த்தும், ஆத்மசுத்தியோடு உங்களை விமர்சியுங்கள் அது உலகையே மேன்மைப்படுத்தும். விமர்சனம் ஒரு பத்திரிகைக்கு மிக முக்கியமானது, கலப்பைக்கு மிக மிக முக்கியமானதாகக் கருதுகின்றோம். அது விமர்சனத்திற்காய் திறந்தே இருக்கும்.

கலப்பை தற்போதைக்கு காலாண்டிற்கான சஞ்சிகையாக
இருக்கும் உங்கள் ஆக்கமும் ஊக்கமும் அதன்
காலத்தைக் குறைக்கும், ஆயுளைக் கூட்டும்.

***இதன் முதற் சுவடு உங்கள்கைகளில்***
***ஒரு தனிச்சுவடு.***

நன்றி

**ஆர்-குழு**



# கவிதை

அம்பி

## "யக்"

பி.ஆர் கிடைத்த
பெரும் ஆர்வம் பொங்கிவர
ஆறு முகத்தார் அருமையென
வாயூறும்

பாணி
பணாட்டும்
பணங்கடடிக் குட்டானும்
பேணிக் கொணர்ந்தார்தம் பேரருக்கு
வாணியென
நாடி அணைக்கையிலே
நப் என்றாள் வாயில் அதைப்
போடுகையில; 'யக்" என்றாள் பெண் !

## எட்டி நட

டோல் எடுத்த தெம்பில்
டொறையர் மகளுடனே
டாலிங் கம் என்று நடைபயில
பால்வெறியில்
கட்டிப் பிடித்துக்
கடித்துச் சுழன்றபடி
கொட்டும் வெயிலில் குளித்தவரை
கிட்டியதும்
பட்டப் பகலில்......
பரதேசிச் சாதியிது
எட்டி நட என்றார் எரிந்து

# உலகத் தமிழ்
# தொலைக்காட்சி சேவை

உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் சென்ற இடங்களெல்லாம் தமிழை மறந்துவிடாதவகையில் நிலை நிறுத்தி வருவதற்காக நாடகம், நாட்டியம், சஞ்சிகை, பத்திரிகை என்று பலவழிகளாக பரிணமித்தது. காலத்தேவைகளுக்கேற்ப வானொலி சேவை ஏற்படுத்தப்பட்டது. லண்டன் பீ பீ சி யின் தமிழோசை தொடக்கம் அவுஸ்ரேலிய சிட்னியின் தமிழ்முழக்கம் வரையாக விரிவடைந்து தமிழ் முழங்கிக்கொண்டிருக்கின்றது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தமிழ்த் தொலைக்காட்சிசேவை அதுவும் உலகத்தமிழ் தொலைக்காட்சிச்சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கேள்விப்பட்டபோது நம்பமறுத்தவர்கள்தான் எத்தனைபேர். நான் உட்பட. இன்று அது நிதர்சனமாகி உலக அரங்கில் தமிழ் ஒளிபரப்பாக வந்துகொண்டிருக்கின்றது என்பதை ஆச்சரியத்துடன் நம்பித்தான் ஆகவேண்டியுள்ளது.

ஜெர்மன் தமிழர்கள்தான் என்னே பாக்கியசாலிகள், அந்த மண்ணில் இருந்துதான் விண்வரை சென்று ஒளிபரப்பாகிறது உலகத்தமிழ் ஒளிபரப்பு. திரு ரி. செல்வநாயகம் என்பவரின் முயற்சியின் பயனாக 27 மார்ச் 94இல் பரீட்சார்த்தமாக தொடங்கிய இச்சேவை 14 ஏப்பிரல் தொடக்கம் 16 மணித்தியால சேவையாக கொண்டு வரப்பட்டு ஐரோப்பிய நாடுகளில் இரவு 8மணி தொடக்கம் மறுநாள் பகல் 12மணிவரை நடாத்தப்படுகின்றது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரியதும் பெருமைக்குரியதுமாகும்.

16 பாகை கிழக்கில் EUTELSAT 11-F3 செயற்கை கோள்மூலம் 11.575 GHZ அலைவரிசைகளிலேதான் இது ஒளிபரப்பப்படுகின்றது மிக விரைவில் அமெரிக்காவிலும், ஆசியாவிற்கும், தொடர்ந்து உலகம்முழுவதும் ஒளிபரப்பப்படவுள்ளது.

தமிழ்த்தாயகமான தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே (அதுவும் அவர்கள் விரும்பினால் மட்டும்) தமிழ்ச்சேவைக்கு தொலைக்காட்சியில் இடம் கிடைக்கும் நேரத்தில் 24 மணித்தியாலங்களுக்கான ஒரு தமிழ்ச்சேவை உலகெங்கும் கிடைக்கப்போகின்றதென்பதை நினைக்க எத்தனை நெஞ்சங்கள் குளிர்ந்திருக்கும்.

இலங்கை அரசாங்கத்தினர் ஜெர்மன் அரசாங்கத்திடம் இத்தமிழ்ச்சேவையை தடைசெய்யும்படி கேட்டிருக்கின்றார்கள் அதற்கு ஜெர்மன் அரசு செவிசாய்க்க மறுத்துவிட்டது அது ஒரு தமிழ்க் கலாச்சார ஒளிபரப்புத்தான் எனக்கூறியுள்ளது.

இத்தனை தடைகளையும் வென்று வான் அலையில் தவழும் இச்சேவை தரமானதாக இருக்கவேண்டும் என்பதே எல்லோரதும் அவா. அதை விடுத்து ஒரே சினிமாவையும், ஓடிப்பிடித்து விளையாடும் காதல் காட்சிகளையும் (இலகுவாக கிடைக்கும் என்பதற்காக) ஒளிபரப்பிக்கொண்டிருக்காமல் பயனுள்ள தரமான தயாரிப்புக்களை செய்து ஒளிபரப்புவதன் மூலம் உலகத் தமிழ்ச்சேவை உலக புகழ் மிக்க சேவையாக இருக்கவேண்டும்.

# அட்டைப்பட விளக்கம்

ஆதிகால கற்கோட்டையா? ஆகாய வீதியில் வலம் வரும் விஞ்ஞானத்தின் விந்தையா, இவை எதுவுமே இல்லை. இப்பூவுலகின் நிகழ்கால அறிவுச்செல்வத்தை தேடிச்செல்லும், அறிவுப் பசிகொண்ட மானிடனுக்கு அகலத்திறந்திருக்கும், அறிவாலயத்தின் படிக்கட்டுக்கள்.அளவுகடந்து நீண்டுசெல்லும் அவற்றின் அந்தம் முடிவிலியா? இல்லை தொட்டுவிட முடியும் என்ற உறுதியுள்ள எவரும் முயற்சித்துப்பார்க்க அமைத்துவிட்ட

படிக்கற்கள்.

*கார்த்திகை மலரின் கமழும் மணத்துடன்*
*காரிகை உன்னைக் கண்டேன் கவியுலகில்*
*அந்தித்தாரகைகள் அரணியை ஆளும் நேரம்*
*அமுதே உன்முகம் பார்க்க அடியேன் ஏங்குகிறேன்*
*சில நேரம் உன் நினைவால் சிதறும் என் மனம்*
*சிறகடித்து நாம் பறக்க சிறிதளவும் தயங்காது*

*உதயத்தில் பூத்த என் இதயத் தாரகையே*
*உனக்காக ஒரு ரோஜா பறித்தேன் இந்த ராஜா*
*ஏனென்று யானறியேன் இயற்கைக்கு இக்கோபம்*
*வாடியதே என் மலர் வடிவே உன் கூந்தலை வருடுமுன்.*

**அ.மோகன்ராஜ்**

# நான் என்ன சொல்ல...

**கோமதி சத்தியமூர்த்தி**



**ச மயலறையில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து கண்ணைக் கசக்கிவிட்டு நேரத்தைப்பார்க்கின்றேன்.**

நேரம் அப்பொழுது தான் 6.30 ஆனால் வூட்டிலோ ஆரவாரம் ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. அம்மா தனது பஜனையை ஆரம்பித்திருந்தாள், அப்பா எங்கோ புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார், அக்காவோதனது நூண்டகூந்தலை துவட்டிக் கொண்டிருந்தாள், வழக்கம்போல் எல்லோருக்கும் முதல் எழுந்து நூராடியிருப்பாள் போலும். லட்டு வாசனை விடெல்லாம் பரவியிருந்தது, எழுந்து சென்று அம்மா உருண்டை உருண்டையாக பிடித்துக்கொண்டிருந்த லட்டொன்றில் கையை வைத்தேன், அதை அம்மா தட்டிவிட்டாள். சுஜா 'இது மாப்பிள்ளை வூட்டிற்கு' என்றாள். 'உங்களின் ஆரவாரத்திலுருந்தே தெரியாதா? எனக்கு ஆனால் இங்கு வருகின்ற ஒவ்வொருவனையும் தானே நூங்கள் மாப்பிள்ளை என்று அழைக்கின்றர்கள்'' என்று கேலி செய்தேன். அப்பா என்னை ஒரு மாதிரி பார்த்துவிட்டு 'தேவகி நான் வெளியில் ஒருக்கா போயிட்டு வாறேன்''.

என்று புறப்பட்டுவிட்டார். அக்காவைப் பெண் பார்க்க வருவது இப்பொழுதெல்லாம் எங்கள் வீட்டில் ஒரு வாராந்த காரியமாகிவிட்டது. இங்கு வந்தவர்களின் ஒருவருக்குக்கூட அக்காவை பிடிக்கவில்லையாம், ஏனென்று தான் எனக்கு புரியவில்லை. அக்காவுக்குத்தான் என்ன குறைச்சல், A/L வரை படித்திருந்தாள், நல்ல அழகாய் இருந்தாள், நன்றாக சமைப்பாள், பாடுவாள், பக்கத்துவீட்டு துவாரகா அக்காவின் வீட்டில் நடக்கும் பஜனுக்கு அக்காவைத்தான் பாட அழைப்பார்கள். அத்தோடு என்னை மாதிரி பட படவென்று பேசமாட்டாள், எல்லோருடனும் பக்குவமாய் பழகுவாள். இப்படிப்பட்ட அக்காவைத்திருமணம் செய்ய விரும்பாத அந்த ஆண் வர்க்கத்தையே எனக்குப்பிடிப்பதில்லை. நான் குளியலறையில் கற்பனையில் மூழ்கியிருப்பதை அக்கா அவதானித்திருப்பாள் போலிருக்கின்றது, அருகில் வந்து கலைந்திருந்த என் கூந்தலை சரிசெய்தவண்ணம் 'என்ன சுஜா அம்மா லட்டு தரவில்லை என்று கோபமா, வா நான் எடுத்துத் தாறேன்'' என்றாள். 'அதொன்றும் இல்லை அக்கா நீ ஏன் இப்படி இருக்கின்றாய்?'' என்றேன். அக்காவின் முகம் சிவந்துவிட்டது 'என்ன சுஜா எதைப்பற்றி கூறுகின்றாய்'' என்றாள். 'இல்லை நீ இங்கு வரும் ஒவ்வொருவர் முன்னும் நாணி, கோணி, குறுகி ஏன் நிற்கவேண்டும்? உனது படத்தைப்பார்த்தால் மட்டும் போதாதா? அவர்கள் வீட்டிற்கு வேறு அடிக்கடி படையெடுக்க வேண்டுமா?'' என்றேன். அம்மா சமையற்கட்டில் இருந்து 'நீ உன் வேலையைப்பார், உனக்கென்ன தெரியும் எங்கள் கஷ்டம் வருகிறவர் அது போதாது இது போதாது என்கின்றார்கள், நேற்று முளைத்த உனக்கென்ன புரியும்'' என்று சத்தம் போட்டாள். அதன் பின் நான் மௌனமாகிவிட்டேன்.

பின்னேரம் மாப்பிள்ளை வீடென்று சொல்லிக்கொண்டு யார் யாரோ எல்லாம் வந்தார்கள், கேள்வி மேல் கேள்விகள் கேட்டார்கள், வயிறாரச் சாப்பிட்டார்கள், அக்காவை மாப்பிள்ளை அல்லாதோரும் அளவெடுத்தார்கள், பின்னர் கடிதம் போடுவதாய்க்கூறி சென்று விட்டார்கள். அவ்வளவுதான், அவர்களிடமிருந்து பின்னர் பதிலே இல்லை. அக்காவும் நானும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோவிலுக்குப் போவது வழக்கம். ஒரு வெள்ளிக்கிழமை வழக்கம் போல் ஐயர் தீபம் காட்டிக்கொண்டிருந்தார், அக்கா கண்ணை மூடி பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்தாள். அப்பொழுது தான் அவன் என் கண்களில் தட்டுப்பட்டான். ஒரு வாட்டசாட்டமான இளைஞன் எங்கள் இருவரையுமே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டு எதிர் வரிசையில் நின்று கொண்டிருந்தான். சரி பார்த்தால் பார்த்து விட்டு போகட்டுமே என்று விட்டுவிட்டேன். ஆனால், அவன் எங்களை சும்மா விட்டானா? பின்னாலேயே எமது வீடு வரை பின் தொடர்ந்து வந்தான். திரும்பி ஒரு தடவை அவனை முறைத்துப்பார்த்து விட்டு வீட்டிற்குள் ஓடி மறைந்து விட்டேன். வேண்டுமென்றே அடுத்த வெள்ளிக்கிழமை அக்காவையும் அவசரப்படுத்தி இழுத்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றேன். இன்றும் அவன் எங்களைப்பின் தொடர்ந்தால் அவனை ஒரு வழிப்பண்ணுவதாக முடிவு செய்து இருந்தேன். சொல்லி வைத்தது போல் கோவில் கிணற்றுக் கட்டிலே எதையோ எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். எங்களைக் கண்டதும் அவன் கண்களில் ஓர் பிரகாசம் மின்னி மறைந்தது. அக்காவை அர்ச்சனை

பண்ண உள்ளே அனுப்பிவிட்டு அவனை அர்ச்சனை பண்ணும் நோக்கில் கிணற்றடியை நோக்கி விரைந்தேன். அருகில் சென்று எம் இருவரையும் பின் தொடர்வதற்கு கன்னா பின்னாவென்று திட்டினேன். அக்காவைப்பெண் பார்க்க வந்தவர்களின் மேல் உள்ள ஆத்திரத்தையெல்லாம் இந்த அப்பாவியின் மேல் கொட்டித்தீர்த்தேன். பாவம், எனது திடீர்த்தாக்குதலை எதிர்பார்த்திருக்க மாட்டான் போலும், அப்படியே அதிர்ந்து போய் விட்டான். பின் தன்னை ஒரு மாதிரி சுதாகரித்துக்கொண்டு அக்காவை ரொம்ப பிடித்திருப்பதாக மெல்லிய தொனியில் சொன்னான். "பிடித்திருக்கின்றது சரி அக்காவை திருமணம் செய்ய சம்மதமா?'' என்று சுள்ளென்று கேட்டேன். எனக்கு பூரண சம்மதம் ஆனால், "உங்கள் அக்கா சம்மதிக்கவேண்டுமே'' என்று ஒரு தவிப்போடு கூறி என்னை அதிர வைத்து விட்டான். இதுவரையில், அக்காவைப்பெண் பார்க்க வந்த எவருமே அக்காவின் எண்ணங்களுக்கு, கற்பனைகளுக்கோ, உணர்ச்சிகளுக்கோ மதிப்பு கொடுத்ததேயில்லை. ஆனால், அக்காவை நன்கு தெரியாத இவர் அக்காவுக்கு கொடுக்கும் மதிப்பு என்னை வெகுவாக கவர்ந்து விட்டது. இவர்தான் அக்காவிற்கு ஏற்ற மாப்பிள்ளை என்று எனக்குள்ளேயே கூறிக்கொண்டேன். 'அக்காவை சம்மதிக்க வைக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்'' என்று ஆறுதல் கூறுவது போல் கூறினேன். வெளியில் நான் காட்டிக்கொள்ளாவிட்டாலும் எனக்குள் ஒருவிதமான மகிழ்ச்சி உணர்வு. எப்படியோ அக்காவின் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. அக்கா இப்பொழுது தனிக்குடித்தனம் போயிருந்தாள். அக்கா வீட்டில் இல்லாதது என்னவோ போல் இருந்தது. இப்பொழுது எல்லாம் என் வாய் ஜாலத்தை ஒருவரிடமும் காட்டமுடிவதில்லை. அத்தோடு நானும் நன்றாக மாறிப்போய்விட்டிருந்தேன். அக்காவின் குணங்கள் சில என்னிடம் குடி வர ஆரம்பித்திருந்தன. அக்காவின் திருமணம் என்னில் ஏற்படுத்திய மாற்றங்களை எண்ணி வியந்தவாறே அயர்ந்து தூங்கிவிட்டேன். மறுநாட்காலையில் சமையலறையில் ஏதோ விழுந்து சத்தம் கேட்டு எழுந்தேன். அம்மாவின் லட்டு வாசனை எங்கும் பரவியிருந்தது. அப்பா வெளியே புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். வீட்டில் ஏதாவது விசேஷமாக இருக்கவேண்டும். அக்காவின் கதை எனக்கும் தொடர்கிறது என்று நினைத்துக்கொண்டே நீராடுவதற்கு குளியலறை செல்கின்றேன்.



# "Question of Survival"

The ethnic identity of young Tamils growing up away from their homelands is a pressing issue in our community. Tamil people have settled in many places throughout the world and in each community, they are trying to protect the Tamil culture by incorporating it in the new cross-cultural identity of their children.

Here in multicultural Australia, we are encouraged to express our traditional cultures, but in many Tamil households across the country, Tamil culture is fading. The new generation of Tamil children growing up here are losing much of their heritage, as they quickly blend in with the mainstream Western culture. Each child's identity is the outcome of a long process of exposure and internalisation guided by both parents and peers.

In the early stages of any child's development it is their parents who have the greatest influence on how Tamil that child is going to be. Tamil parents in Australia have the responsibility to lay the foundations of Tamil culture in their children, the very foundations that will enable the next generation of Tamils to not only retain but also appreciate their Thamilness.

But, how can we preserve our culture if these foundations are being ignored by both parents and children alike? How can we preserve our culture if Tamil children answer in English when spoken to in Tamil and their parents are proud of the fact that their children can understand Tamil? How can we preserve our culture if Tamil children think that Tamil culture is restrictive and a burden on thier lives, while their parents are happy as long as they study hard so that they can become doctors or engineers?

One of the greatest problems facing Tamil families living away from their homelands is the fact that there seems to be no real committment to lay the foundations, no real committment to preserve our culture by parents and children. It is easy for Tamil children to just blend in but it takes a whole lot more effort to establish a cross-cultural identity. If we are to keep Tamil culture alive, we must sort out this difference in aspirations and priorities. Parents and children must communicate their needs to each other.

It is important to remember that there doesn't have to be a conflict between Tamil culture and Western culture. Parents often believe that if they nurture the Tamil side of their child too much, then he/she might loose the ability to do well in Australia, functioning as an Australian. They think there is a trade-off between Tamilness and Australianess. However, there does not necessarily have to be a conflict. In fact exposure to Tamil culture could be beneficial in a number of ways. It may supplement one's general knowledge and a second language is good for one's logical process, not forgetting the usefulness of a second language in tricky situations. Likewise it equally important to realise that exposure to Western culture will not mean that a child will be less Tamil.

It is both possible and even beneficial to maintain two cultures at the same time. It is my personal goal to be as Tamil as possible and as Australian as possible. That is, I want to be able to communicate in Tamil and know enough about my heritage to function as a Tamil person. When my grandmother comes to visit us, I want to be able to talk to her. When I go to the temple, I want to be able to know what is what. When we have visitors and they are talking about the situation in Eelam, I want to be able to participate in their conversation. On the other hand, I want to be able to function in the mainstream Australian society as well as anybody else. I want to draw the best of both worlds and combine them to make

myself a better person.

Learning about my ancestors, my heritage and who I really am has been an important part of my self-development. To know that I can function in two cultures effectively not only makes me proud but also increases my self-confidence. Pride in one's identity is very important. If we take pride in our cultural heritage, I believe we will all be better people. Culture is of course a very complex thing that is not easily identifiable. Most of us are unaware as to what our culture includes and thus find it difficult to know what it is that we want to preserve. Thamil classes and dance classes are obvious outlets that we often use as methods of fostering our culture. Unfortunately, sometimes Tamil culture ends here for many of our younger generations. Beyond the weekend classes, Tamil culture is something that doesn't concern them.

From my experience, there is a lot more to being Tamil than just knowing the language. I have been fortunate to have been exposed at a very young age to many other aspects of our rich and diverse culture. I did not go to Tamil school on the weekends, I learnt about Tamil culture everyday from the Thamil people that I mixed with, from the Tamilness that surrounds me and from my parents.

I have accepted that as I grow older, and progressively busier, I will have less time to learn about my culture. While I am still living with my parents and still in contact with many Tamil people, I have the necessary resources to learn about my culture. If I do not take the opportunity to do so now, I may never have the chance. The worst thing for me to do is to not make use of the opportunity now and then later regret that I had not done so. So, even if it is just to be safe, exposing myself to Tamil culture is the right thing to do.

It is my hope that our culture will survive and grow. I have realised that some of the responsibility lies on me and my generation to enable this but I have also realised that this responsibility is shared between all Tamils of all generations. Parents and children are equally important in this process. A publication such as this and the work of the Sydney University Tamil Society should serve to remind us that Tamil culture is alive in the future generation but how long and how well it will be with us is a question that will be determined by the commitment of every Australian Tamil.

# முகமிழந்த மனிதன்

செ. பாஸ்க்கரன்

இரத்தக்கட்டிகள்
உறைந்த வீதிகள்
பதுங்கு குழியின்
வெப்பக் காற்று
புகைக்கும்
துப்பாக்கிக் குழல்கள்
எவையுமே இங்கில்லை

வானத்து வெள்ளிகளை
கிழக்குச் சூரியனை
அந்திப்பொழுதில்
ஆர்ப்பரித்து
நெஞ்சைக் குளிரவைக்கும்
நுரைபொங்கும் கடலலையை
எப்போது வேண்டுமானாலும்
பயமின்றிப் பார்க்கலாம்

வானத்திலிருந்து
கொப்பளித்து பாய்கின்ற
ஈயக்குண்டுகளோ
வார்ப்புப் பறவை வந்து
கொட்டுகின்ற குண்டுகளோ
தலைக்குப்பின்னால்
நீளுகின்ற கருவிகளோ
தனிமையில் போகையில்
உயிர்குடிக்கும் வீரர்களோ
எவையுமே இங்கில்லை

இருந்தும் நான்
முகமிழந்த மனிதனாய்
மனதழிந்த கவிஞனாய்
நாடற்ற நடைப்பிணமாய்
அகதியாய் வாழ்கிறேன்
விடியலை நோக்கி
விரிகின்ற பாதையை
சுதந்திரக் காற்று
வீசும் திசையை
தேடும் வரையும்

# தமிழும் தமிழரும்



## பரமேஸ்வரி நல்லதம்பி

தமிழில் இன்று நமக்குக் கிடைக்கும் முதல் நூலான தொல்காப்பியத்தின் பாயிரத்தில் 'வட வேங்கடம் தெந்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று பனம்பாரனர் பாடியிருக்கிறார். தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கடம் முதல் தெற்கே குமரி வரை தமிழர் பரவியிருந்தனர் என்பதை இப்பாயிரம் உணர்த்துகிறது. இன்றோ தமிழர்கள் அந்த எல்லைகளைத் தாண்டி உலகில் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் நிலவி தமிழை வளர்த்தன என்று பொதுவாகக் குறிப்பிடுவது கடைச்சங்க காலத்தைக் (கி.மு. 2,3 நூற்றாண்டுகள்) குறிக்கும் என்பதும் வரலாறு நமக்குத் தரும் செய்திகள்.

தமிழ்மொழி உலகத்தவர் போற்றிப் புகழும் சிறப்பான இலக்கிய நூல்களைக் கொண்டது. சமஸ்கிருதம், கிரேக்கம், சீனம், எபிரேபியம் மொழிகளைத் தவிர ஏனைய மொழிகளுக்கில்லாத தனிச்சிறப்பு நம் தமிழுக்கு உண்டு. தமிழர் வாழ்வையும், பண்பாடையும் அறிய நமக்குப் பெருந்துணை புரிவன நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற இலக்கண, இலக்கிய நூல்கள். இவை நமக்கு விளக்குவதுடன் மட்டுமல்லாது உலக மக்களிடையில் தமிழருக்கு தனி மதிப்பையும் பெற்றுத் தருகின்றன.

தமிழர்கள் கட்டிக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலைகளில் சிறந்து விளங்கினர். தமிழரின் இக்கலைகள் இன்றும் உலகத்தவரால் போற்றப்படுகின்றன.


சங்க காலத்தில் தமிழர்கள் பிறநாடுகளுடன் கடல் வாணிபத்தில் சிறந்திருந்தனர். கிரேக்கம், சீனம், ஆப்பிரிக்கா, பிலிப்பைன்ஸ், ரோம், சப்பா முதலான நாடுகளுடன் தமிழர்கள் கடல் வாணிபத்தில் ஈடுபட்டு மயில் தோகை, தந்தம், மணப்பொருட்கள், மிளகு, எருதுகள், அரிசி, மயில், சந்தனம் போன்றவற்றை எற்றுமதி செய்தனர். இந்த கடல்வாணிபத்தின் மூலம் பல தமிழ்ச் சொற்களும் பிற மொழிகளுடன் சென்று கலந்தன.

தமிழ் மன்னர்கள் சைவ, புத்த மதங்களை ஆசிய நாடுகளில் பரப்பினார்கள். இவ்வாறு தமிழர்கள் உலக மக்களுக்கு முன்னோடிகளாக விளங்கினார்கள்.

இந்த 20ம் நூற்றாடிலோ உலக மொழிகள் காலவளர்ச்சிக்கேற்ப, அறிவியல், தொழில் நுட்பக் கலைகளில் தன்னைப் புதுப்பித்துக் கொண்டும், வளர்த்துக் கொண்டும் வருகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் வளரத் தொடங்கிய சப்பானியர் இன்று உலகத்தவர் வியக்கும் வகையில் தம்மை வளர்த்துக் கொண்டு, தம் மொழியையும் வளர்த்திருக்கிறார்கள். பிறமொழியினர் இன்று போட்டியிட்டுக் கொண்டு சப்பானிய மொழியைக் கற்றுக் கொள்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம், தாமறிந்த கலைகளை தமது தாய்மொழியில் அவர்கள் எழுதி வைத்ததுதான். சப்பானிய மொழியைப் புறக்கணித்துவிட்டு சப்பானியர் ஆங்கிலம் அல்லது மற்ற மொழிகளில் எழுதி இருந்திருப்பார்களேயானால் இன்று எவரும் சப்பானிய மொழியைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்கள். பிறமொழியினர் தத்தம் மொழிகளில் சப்பானிய மொழி கூறும் கலைகளை மொழி பெயர்க்கும் போது சப்பானியரின்பண்பாடும் பிறமொழியினரிடையே பரவுகிறது.

தமிழ்க் கல்வி என்பது வெறும் இலக்கியக் கல்வியே, அறிவியல், தொழில் நுட்பக்கலைகளை ஆங்கிலம் தான் தமிழர்களுக்கு கற்றுத் தர முடியும் என்ற எண்ணம் தமிழர்களிடையே இருந்து வருகிறது. அதனால், தமிழர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலன் எண்ணி இளம் வயதிலிருந்தே ஆங்கிலத்தில் கல்வி கற்கச் செய்கிறார்கள். இதற்கான முக்கிய காரணம் தமிழர்களுக்குள்ள ஆங்கிலமோகமாக இருக்க முடியாது. தமிழில் போதிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கலை நூல்கள் இன்மையும், தமிழைப் படிப்பதால் தம் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்காது என்னும் தமிழர்களின் எண்ணமுமே முக்கிய காரணமாக இருக்க முடியும். எனவே, தமிழர்கள் ஆங்கிலக் கல்வி பயில்வது சரியா, தவறா என்பன போன்ற வீண் வாதங்களை விட்டு விட்டு தமிழ்மொழியில் தமிழ்க் குழந்தைகள் எல்லா கலைக் கல்வியையும் பெறும் வழிவகைகளைக் காண்பதில் நாம் ஈடுபட வேண்டும்.

ஆஸ்திரேயாவில் குடியேறியுள்ள நாம் நம் குழந்தைகள் தமிழில் எழுத, பேசக் கற்றுக் கொள்ள தமிழ்ப் பள்ளிகளை நடத்துகிறோம், தமிழ்ச் சங்கங்கள், தமிழ் மன்றங்கள் அமைத்துக் கொண்டு இருக்கிறோம், இசைக்கலை, நடனக்கலைகளை நம் குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறோம், கோயில்கள் கட்டி தெய்வ வழிபாடு செய்கிறோம, அவ்வப்போது இலக்கிய விழாக்கள் நடத்தி நம் தமிழ் மொழியின் பழம் பெருமை பேசி அமைதி அடைகிறோம். இவையாவும் நமக்கு நம் தாய்மொழி மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றன, கடல் கடந்து வந்த நாம், நம் தாய்மொழியையும் பண்பாட்டையும் நம் குழைந்தைகளுக்கு விட்டுச் செல்ல முயல்வதை உணர்த்துகின்றன. இவை யாவற்றையும் கடந்து ஒருபடி மேலே சென்று நாம் நம் தமிழை வளர்க்கச் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. அது பிறமொழிகளில் உள்ள பயனுள்ள நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பதும், பயனுள்ள கலை நூல்களை தமிழில் எழுதுவதுமாகும். அதற்கான வாய்ப்பும், பொறுப்பும் நமக்கும் நம்மைப் போல் வெளி நாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் இருக்கிறது. நமக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயனபடுத்திக் கொண்டு நாம் தமிழில் நூல்கள் எழுத முன்வர வேண்டும்.




பூத்துக்குலுங்கி மணம்பரப்பும் மல்லிகைப் பந்தலின கீழ்நின்று பிஞ்சுக்கரம் அசைத்து மழலை மொழியில் 'டட்டா' சொன்ன மகள் இன்று – இங்கே – "யூ... ஸ்டுபிட்... உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்றபோது மனம் நொந்தது மூர்த்திக்கு.

"எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது ?" – மூர்த்திக்கு வியப்பாகவிருந்தது.மாறிய சுவாத்தியம், அந்நியப்பட்டுவிட்ட சுற்றாடல், அனுபவிக்கும் நவீன தொழில்நுட்ப வசதிகள், தெரிந்து கொண்ட சமூக அமைப்பும் சட்டதிட்டங்களும் பிள்ளையை இவ்வாறு
மாற்றியிருக்கலாமா? அல்லது – தலைமுறை இடைவெளியின் பூதாகரத் தோற்றமா ? மூர்த்தி அண்மைக்காலமாக யோசிக்கத் தொடங்கிவிட்டான்.
மகள் இங்கிதமற்றுப் பேசி– மனதில் வேதனையை ஆழமாக பதித்துவிட்டது போன்ற உணர்வு. வெளியில் போயிருந்த அப்பா, வீடு திரும்பிய காலடியோசை கேட்டதுமே, நீடித்த குறும்புகளையும், அவர் இல்லாதவேளையில் மீண்டும் அவிழ்ப்பதற்காக தற்காலிகமாக 'மூட்டைகட்டி' வைத்துவிட்டு மூலையில் முடங்கி பாடப்புத்தகத்தை விரித்துப் பழகிய மூர்த்திக்கு– இங்கே தனது பிள்ளைகள் தன்னை அலட்சியமாக பார்ப்பதையும், எடுத்தெறிந்து பேசுவதையும் ஜீரணித்துக்கொள்ள இயலவில்லை.

மூர்த்தி அவுஸ்திரேலியாவுக்கு வந்து நான்கு வருடங்கள் கழித்தே அவன் மனைவியும் பிள்ளைகள் இருவரும் வந்தனர். 'பெண் வளர்ச்சி கோழி

வளர்ச்சி' என்று ஊரில் முன்பு ஆச்சி சொல்வதுதான், தனது இரண்டு மகள்மாரையும் நீண்ட இடைவெளிக்குப் பின்பு பார்த்ததும் நினைவுக்கு வந்தது.

வந்து – இரண்டாவது வருடமே மூத்தவள் பெரியவளாகிவிட்டாள். மனைவியோ, அடிக்கடி மாறும் பருவகாலங்களை திட்டித்தீர்த்துக் கொண்டு, ''ஏன்...எங்களை இங்கை கூப்பிட்டனீங்கள்?...ஊரோடு இருந்திருக்கலாம். இங்கை குளிரும் கொடுமை, வெய்யிலும் கொடுமை."

மனைவியின் இந்த 'புறுபுறுப்பை' கேட்டுக்கேட்டே மூர்த்திக்கு மனம் சலித்துவிட்டது. 'சந்தோஷமான' நேரங்களில் – 'ஹீட்டரின்' அவசியம் இன்றி, கதகதப்பான அரவணைப்பில் மாத்திரம், "....உண்மைதான், இந்த நாடு பலவிஷயங்களில் நல்லது. அங்கை சனம் படுகிற பாடு.... ஒருவகையில்... இங்க வந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள்." – எனச் சொல்லிக்கொள்வாள். யுத்தமேகம் சூழ்ந்த தாயக துன்பங்களும் அழிவுகளும், விலைவாசி ஏற்றங்களும் – ஆளும் தலைமைக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலையும் சில நிமிடங்கள் உரையாடப்படும். மூர்த்தியோ, இந்த சில கணப்பொழுதாவது மனைவியிடமிருந்து 'இங்கிதம்' பொழிகிறதே என்ற ஆறுதலுடன் தூங்கிப்போவான்.

அதிகாலை துயில் எழுந்து அவசர அவசரமாக தன் சிரமபரிகாரங்களை முடித்துக் கொண்டு உணவும் தயாரித்து– என்ன சமையலா – இல்லை, அடுப்பெரிக்காமல், பாண் துண்டுகளுக்கு நடுவே கறியோ, 'சலாட்டோ' வைத்து பக்குவமாக உருவாகும் 'சான்ட்விச்சு'டன் இரண்டு பழங்களையும் ஒரு 'ஷொப்பிங் பேக்கி"ல் போட்டுக் கொண்டு மூர்த்தி வேலைக்குப் புறப்படும் போது – பிள்ளைகள் எழுந்து 'ஹீட்டரை'ப் போட்டுக்கொண்டு 'குயில்ட்'டால் போர்த்தியவாறு 'குஷனி"ல் அமர்ந்து 'ரி.வி' பார்க்கத் தொடங்குவார்கள். மூர்த்திக்கு தொலைக்காட்சி நிலையங்கள் மீதும் கடும் வெறுப்பு.

"ஏன்தான் இந்தப்பாவிகள் பிள்ளைகள் 'ஸ்கூல்' புறப்படும் நேரத்தில் இந்த கோதாரி 'கார்ட்டூன்களை' போடுறாங்களோ...?'' – மூர்த்தி கத்துவான்.

"இப்படி 'ரி.வி.' பார்க்கிற நேரத்துக்கு ஏதும் பாடம் எடுத்துப் படிக்கலாம்தானே. காலையில் படித்தால் மனதில் நிற்கும்..... நாளைக்கு இந்த 'ரி.வி.' தான் உங்களுக்கு சோறு போடப் போகுது.... "

"நாங்க சோறு சமைத்தால்தானே..... 'டேக் எவே' இருக்கு" – மூத்தவள் சொன்னதைக் கேட்டு ரசித்து சிரிக்கிறாள், இளையவள்.

"பொத்தடி வாயை ..... பல்லுக் கொட்டிப் போடுவன்...." "சரி...சரி ...தொடங்கிட்டார்... நாங்க 'ரி.வி' பார்த்தா உங்களுக்கென்ன
பொறாமையா.... வந்திட்டார் பெரிசா.... சொல்றதுக்கு....." – மூத்தவள் பதிலுக்கு கத்துகிறாள். பாத்ரூமில் நிற்கும் மனைவிக்கும் கேட்கிறது.

"இது வாடிக்கையாகப் போச்சுது. நீங்க வெளிக்கிட்டா போங்கோவன்..... நிண்டு கொண்டு உபதேசம் சொல்றீங்கள்...... அதுகளை நான்

பார்க்கிறன் நீங்க.... வேலைக்குப் போங்கோ........"

மூர்த்தி கோபத்தை அடக்கிக் கொண்டு காரை எடுத்துக் கொண்டு வேலைக்கு போகிறான். விவகாரத்தை தொடராமல் முற்றுப்புள்ளியிட்டு கோபத்தை அடக்கி புறப்படுவதற்கும் காரணம் இருக்கிறது. பிள்ளைகளுடன் வாதம் செய்துகொண்டு நின்றால் வேலைக்குத் தாமதமாகிவிடும். காலைப்பொழுதில் இவ்விதம் 'மூட் அவுட்' ஆகிய நாட்கள் பல.

"இவள்.... என்னத்தைப் பார்க்கிறாள். இனி இவளும் – அதுகளுடன் இருந்து 'கார்டடூன்' பார்ப்பாள். எட்டு மணியானதும் பரபரப்புடன் பிள்ளைகளை தயார் படுத்துவாள்." தலைவாரும் பொழுது 'கிளிப்'பும் 'ஸ்லைட்'டும் தேடும் போராட்டத்தில் சில நிமிடங்கள் கரையும்.

"என்ர பேனையை அவள் எடுத்தாள். என்ர பென்சில இவள் எடுத்தாள்".– என்று இரண்டு பிள்ளைகளும் யுத்தத்திற்கு தயாராவார்கள். தாயோ, ஐ.நா. சபையாக மாறி அவரவர்க்குரியதை தேடிக்கொடுத்து ஸ்கூல் அனுப்பிவிட்டு அப்பா...." என்று ஆயாசமாக சில நிமிடங்கள் சாய்வாள்.

ஒரு 'டேய் ஓவ்' நாளில் இத்திருக்கூத்துக்களையும் மூர்த்தி பார்த்துள்ளான். தொழிற்சாலையில் உடன் வேலை செய்யும் ஹஜீசைன்– இவன் துருக்கியன்– சொல்வான், "இங்கே..... எங்கட பிள்ளைகளை வளர்ப்பது கஷ்டம். 'ஓஸியா' மாறப்பார்க்குதுகள். இன்னும் சறிது காலத்தில் 'இஸ்தான்புல்' லுக்கு போய்விடுவோம்."

அவனுக்கென்ன அவுஸ்திரேலியாவுக்கு வந்து பல வருடங்கள். உழைத்த பணத்தில் வீடும் வாங்கி 'மோட்கேஜஜீம்' செலுத்தி முடித்து விட்டான். வீட்டை விற்றாலும் நல்லபணம்– வேலையிலிருந்து விலகினாலும் முப்பதாயிரத்திற்கும் குறையாமல் கிடைக்கும்.

மூர்த்தி என்ன செய்வான், உழைத்ததில் ஒருபகுதி கொழும்பில் குடும்பம் நின்றபோது ரெலிபோனுக்கு செலவழித்து வட்டான். தான் புறப்படுவதற்கு ஏஜன்ஸிக்கு கொடுக்க வட்டிக்குப் பெற்ற பணம் 'குட்டி'யுடன் செலுத்த நேர்ந்தது.

வெளியே ஓடித்திரிந்து விளையாட முடியாமல் 'பிலட்' வீட்டிற்குள் முடங்கியிருப்பதனால் ஏற்படும் 'அமுக்கம்', பிள்ளைகள் மனைவியின் இங்கிதமற்ற பேச்சுகளுக்கு காரணமோ என யோசித்து– புதிதாக விலைக்கு வீடு ஒன்றை வாங்குவதற்கான முயற்சியிலும் மூர்த்தி ஈடுபட்டிருக்கிறான்

மனைவியுடன் கலந்துரையாடிய பொழுது– அவளும் " நல்லந்தான்... நீங்கள் பிள்ளைகளை சத்தம்போட்டு அதட்டுறீங்கள்.... அதுகள் எங்கதான் போறது... ரிவியை விட்டால்... அதுகளுக்குப் பொழுதும் போகுதில்லை.... வெளியில குளிர்.... என்னதான் செய்யிறது... நடமாடித் திரியிற பெரிய வீடாக இருந்தாலும் பரவாயில்லை... இந்த புறாக்கூட்டுக்குள்ள கண்டறியாத சீவியம்...."

"ஓமோம்.... சொல்லுவர்.... உமக்கும் வேலையில்லை. நான் ஒருத்தன் வேலை செய்து வீடு வாங்கிறது எண்டால், டிப்பொஸிட்டுக்கு கொஞ்சம்

கூடுதலாக காசு வேணும்... பேங்.... லோன், ஒரு ஆளின்ட வருதானத்துக்கு குறைவாகத்தான் கிடைக்கும்.... ஏதோ புதிதாக பெரிய வூடு வாங்கித் தந்திட்டால் உம்மட பிள்ளைகள ரி.வி. பார்க்கிறதை குறைத்து... பாடம் படிப்பதில் மூழ்கிவிடும் எண்டு நினைக்கிறாராக்கும்...."

"இனித் தொடங்கிவிடுவார்... புராணம் பாடுறதுக்கு... பிள்ளைகள் என்ன சொல்லுதுகள் தெரியுமே.... "– மனைவி சொல்லத் தாமதித்தாள் தயங்கினாள்.

" என்ன... என்ன.... தாயும் மக்களும் என்ன...?– மூர்த்திக்கு கோபம் கொப்பளித்தது. அவனுக்கு அண்மைக்காலமாக ஏனோ மூக்குநுனியில் கோபம் துளிர்க்கிறது.

"உங்களுக்குப் பொறாமையாம்.... பிள்ளைகள ரி.வி. பார்க்கிறது அப்பாமாருக்கு பொறாமையாம்."

"சொல்லுவாளுகள்... அவளுகள் மாத்திரம் இல்லை.... நூரும் சொல்லுவர்தான்."

"ஏன் சும்மா கத்துறுங்கள்.... அதுகளின்ட வயசில.... நூங்கள் என்ன செய்திருப்பீங்களோ.... யாருக்குத் தெரியும்...?"

"அப்ப... ரி.வி. இல்லை.... நாங்கள் காலையில் நாலுமணிக்கு எழுந்து படிச்சோம்.... பின்னேரம் 'ஸ்கூல்' விட்டு வந்து.... டியூட்டரிக்குப் போனோம்.... எப்பவும் படிப்பு... படிப்புத்தான். இல்லையெண்டால் அப்பா.... கொன்றுபோடுவார். அதனாலதான்.... நானும், தம்பி... தங்கச்சிமாரும் ஒரே தடவையில் சோதனைகள் 'பாஸ்' பண்ணி 'யூனிவர்சிட்டி'க்கும் போனோம். "

"ஓமோம்.... போனீங்கள்.... இஞ்சினியராக வந்தனீங்கள்... இங்க... அவுஸ்திரேலியாவில் ஃபக்டரியில் 'லேபர்' வேலை செய்யிறீங்கள்.... உங்கட கொப்பர் இப்ப உயிரோட இல்லை.... இருந்து அறிஞ்சார் எண்டால்.... அவர் சாவதற்கு ஷெல் அடியோ.... பொம்பர் அடியோ தேவையில்லை.... இங்க... நூங்கள் படுகிற கஷ்டம் தெரிஞ்சாலே போதும்.... ஹார்ட் அட்டாக் வந்து சாவதற்கு...? "மனைவியை ஓங்கி அறையவேண்டும் போலிருந்தது.... ஆத்திரத்தை அடக்கிக்கொண்டான் மூர்த்தி.

விக்டோரியா மாநிலத்தில் ஓராண்டில் மாத்திரம் முப்பத்தி ஆறாயிரம் 'கோம் வைலன்ஸ்' புகார்கள் பதியப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் மூவர்ண சுவரொட்டியை சமீபத்தில் மனைவியை 'கிளினிக்' அழைத்துச் சென்றவேளையில் மருத்துவமனையில் பார்த்த ஞாபகம் மூர்த்திக்கு வந்தது.

பிள்ளைகளையோ, மனைவியையோ கண்டிப்பதற்காக அடிக்க முடியாது.... இங்குள்ள சட்டத்தில் அதற்கு இடமில்லை. இச்சட்டம் மனைவி, பிள்ளைகளுக்கு சாதகமாக இருப்பதும் மூர்த்திக்கு உளக்குமுறல்.

மூர்த்தி மனைவியுடன் கதையை வளர்க்காமல் வெளியே புறப்பட்டான். பொறாமையா....? எனக்கு என் பிள்ளைகள் மீது பொறாமையா....? இதென்ன பேச்சு.... எல்லாம் இவள் கொடுத்த இடம்தான்..... நான்காண்டுகள்

தோற்றுவித்த பிரிவை சாதகமாக்கி பிள்ளைகளுக்கு செல்லம் கொடுத்துவிட்டாள். இப்போது.... இரண்டும் சொற்பேச்சு கேட்பதில்லை..." மனைவி மீதே மூர்த்திக்கு கோபம் பொங்கியது.

"அம்மா.... எங்களை இப்படியா வளர்த்தா.... அந்த கண்டிப்பான பராமரிப்புத்தானே.... இன்றும் பெற்றோரிடம் பயங்கலந்த மரியாதை. அந்நியதேசம்.... பயமற்றதா.... பயம்கலந்த மரியாதை இங்கு அர்த்தமற்றதா... நான் இன்னும் தாய்நாட்டில்தான் வாழ்கின்றேனா...? "மூர்த்திக்கு 'இரண்டக வாழ்வு' புரியத் தொடங்கியது – குடும்பம் வந்து சில மாதங்களுக்கு பின்புதான்.

காலையில் மூர்த்தி வேலைக்குப் போகும்போது இரவு உடைகளுடன ரி.வி. க்கு முன்னால் அமரும் பிள்ளைகள், அவன் மாலை 6 மணிக்கு மேல் வேலையால் திரும்பும் பொழுதும் – பாடசாலை ச "ருடை மாற்றாமல ரி.வி. க்கு முன்னால் இருப்பதைக் கண்டதும் எரிச்சல் பற்றிக்கொண்டு வருகிறது. "என்ன.... இன்னும் யூனி∴போம் கழற்ற இல்லையோ... அதுக்கும் ஒருக்கால் சொல்லவேணுமோ.... இப்ப நேரம் என்ன...? " மூர்த்தி பிள்ளைகளிடம் கேட்கிறான். "வெதர் போர்காஸ்ட்' பார்க்கவேணும்" ஏக குரலில் சொல்கின்றன. "ஓ.... நாளைக்கு மழையா – வெயிலா பார்த்துத்தான் வெளியில போகப்போறியளாக்கும்." மூர்த்தி ஏளனமாக கடிந்து கொண்டு குளியலறைக்குள் நுழைகின்றான்.

" எழும்புங்கோடி..... அந்த மனுஷன் இனித்தொடங்கிவிடும்.... போய் உடுப்பை மாத்தி.... முகம் கழுவி படிக்கக் குந்துங்கோடி...." " இப்ப.... எப்படி 'வோஷ்' எடுக்கிறது.... அப்பா... பாத்ரூமில...." மூத்தவள் ஆசனத்தை விட்டு எழாமலே சொல்கிறாள். " அப்பராச்சு.... பிள்ளைகளாச்சு... என்ன பாடும் பட்டுத் தொலையுங்கோ..." தாய் இரவுச்சாப்பாடு தயார்பண்ண ஆயத்தமாகிறாள்.

மூர்த்தி குளித்து உடைமாற்றி வெளியே வந்தபோது ரி.விக்கு முன்னால் பிள்ளைகள் இல்லை. மனைவி தந்த தேந "ருடன் ரி.விக்கு அருகில் சென்று 'எஸ்.பி.எஸ் ஷனலை' போட்டு 6.30 மணி உலகச் செய்திகளுக்காக முன்னால் அமருகின்றான். றுவாண்டா அகதிகள் இருக்க இடமின்றி அல்லல்பட்டு திறந்தவெளியில் மழையிலும் குளிரிலும் அவஸ்தைப்படுவதை சித்தரிக்கும் காட்சியும் செய்தியும் ஒளிபரப்பாகிறது.

ஊரில் பிள்ளைகள் மின்சாரவெளிச்சம் இல்லாமல் மண்ணெண்ணை விளக்குகளில் படித்து பரீட்சைக்கு தயார் செய்வதும் – குண்டுத் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு 'பங்கருக்குள்' பதுங்குவதும் மூர்த்தியின் நினைவுகளில் காட்சிகளாக அலைபுரண்டன.

செய்தி முடிய ரி.வியை அணைத்துவிட்டு வெளியே வந்தான். மனதில் இனம்புரியாத சுமை. வானத்தைப் பார்க்கிறான். இன்னும் இருள்கவியத் தொடங்கவில்லை.

பட்சிகள் கூட்டமாக இருப்பிடம் நோக்கிப் பறக்கின்றன. குளிர்ந்த காற்று இதமாக வருடிச் செல்கிறது.... மூர்த்தி வானத்தையே பார்த்துக் கொண்டு மௌனமாக நிற்கிறான்.

வானத்தில் இன்னும் வெளிச்சம்.... வானத்தில் மட்டும்தான்.

# தமிழ் மக்களின் நலன் கருதும் ஆராய்ச்சி

–ப.மோகன்–

உலக ரீதியில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் வெளியான தகவல்களின்படி சுமார் நான்கு கோடி மக்கள் தங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறி பல்வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். தங்கள் நாட்டில் நடைபெறும் மதக்கலவரம், இனக்கலவரம் மற்றும் பல்வேறு அரசியல் காரணங்களுக்காகவும் அவர்கள் தங்கள் மனைவி மக்களைப் பிரிந்து, தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும் பறிகொடுத்துப் பிறநாடுகளில் குடியேறி பல இன்னல்களைச் சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்திவருகிறார்கள். மேலும் அவர்கள் புதிய மண்ணில் தங்கள் வாழ்க்கையை நிலைநிறுத்திக்கொள்ளும் போராட்டத்தில் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. அவைகளில் சில குடியுரிமை மனு பரிசீலனை செய்வதில் காலதாமதம், வேலைசெய்ய அனுமதியின்மை, இனப்பாகுபாடு, தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவிடுவார்களோ என்ற பயம், குடியுரிமை இலாக்கா அதிகாரிகளுடன் கருத்துவேற்றுமை, பொதுநல வசதியின்மை, அவசர நிலையில் தாய்நாடு செல்ல இயலாமை, அரசாங்க சமூகநல உதவியின்மை, மனநோய் மருத்துவ வசதியின்மை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

அவ்வாறு அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் தேடி வாழ்ந்துவரும் பல்வேறு இனத்தவர்களின் பொதுவான வாழ்க்கைப் பிரச்சினைகள், மேலும் மருத்துவ மற்றும் மனநிலை பாதுகாப்பு வசதிகள், கேள்விக்குரியதாக உள்ளது. மேலும் தற்போதய மருத்துவப் பாதுகாப்புச் சேவைகள் அடைக்கலக் குடியுரிமை மனுதாரர்கள் அனுபவிக்கும் பிரச்சனைகள் ஒருசில இடங்களில் மட்டும் ஆங்காங்கே மிகச்சிறிய அளவி –லேயே கண்காணிக்கப் படுகின்றன எனவேதான் நாங்கள் அவர்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளையும், அவர்களது மருத்துவச் சேவைகளின் தேவைகளையும் ஒருங்கிணைத்து இந்த ஆய்வின் மூலம் பெரிய அளவில் ஒழுங்குபடுத்த முற்பட்டிருக்கிறோம்.

குடிபெயர்ந்தோர் ஆய்வு முகாம் என்ற அமைப்பின்கீழ் நாங்கள் பல்வேறு இனத்தவர்களின் குறிப்பிட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வுகாண முற்பட்டுள்ளோம். நாங்கள் ஏற்கெனவே மேற்கொண்ட ஆராய்ச்சிகளில் சீனத்தவர், வியட்ணாமியர், கிழக்கு தீமோரீஸ் போன்ற இனத்தவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். இந்த ஆராய்ச்சிக்கு மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனம் பொருளுதவி அளித்து ஊக்குவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ்க் குடிமக்களின் நலச்சேவைகளின் தேவைகள் குறித்தும், தற்போதைய நடைமுறையில் அச்சேவைகள் எந்தக் கோணத்தில் பரிமாறப்படுகிறது என்பதைப்பற்றியும் கணிக்கும்பொருட்டு நாங்கள் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப்போனால்

அவுஸ்திரேலியாவில் ஏற்கனவே நிரந்தரமாக வாழ்ந்துவரும் தமிழ்க் குடிமக்களின் நலத்தேவைகளோடும் தகுதிகளோடும் ஒப்பிட்டுப்பார்க்க விரும்புகிறோம். பொதுவாகத் தமிழ்ச் சமுதாயத்திற்கும், குறிப்பாக அடைக்கலம் தேடி இங்கே வந்து இருப்பவர்கள் தேவைகளுக்கும் ஏற்ப அவர்களின் நலச்சேவைகளை மேம்படுத்தக்கோரி மாநில மற்றும் மத்திய நல இலாக்காக்களுக்கு எடுத்துரைப்பதே எங்களின் குறிக்கோளாகும். இந்த ஆய்வில் பங்கெடுத்துக்கொள்பவர்கள் அளிக்கும் தகவல்களைச் சேகரித்து அவைகளைப் பரிசீலனை செய்யும்போது உண்டாகும் பொதுவான சாயல்கள் பொதுவாக அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், குறிப்பாக அடைக்கலம் தேடி மனிதாபிமானத்தின் பேரில் இங்கே குடியிருக்கும் தமிழ் மக்களுக்கும், நலப்பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட சேவைகளை நிறைவேற்றும் திட்டங்கள் தீட்டுவோருக்கு எடுத்துரைப்பதற்கு உதவியாக இருக்கும். அடைக்கலம் தேடி மேற்கத்திய நாடுகளில் அதாவது, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் குடியேறி வாழ்க்கை நடத்திவருகிறார்கள், இருப்பினும் இப்படிப்பட்ட பெரிய அளவிலான ஆராய்ச்சி தமிழ் மக்களின் மூது நடத்தப்படுவது இதுவே முதன் முறையாகும். எனவே இங்கே நடத்தப்படும் ஆராய்ச்சிகளும் அதன் முடிவுகளும் பல்வேறு மேற்கத்திய நாடுகளில் அதாவது, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் அவர்களும் கடைப்பிடிக்க மிகவும் தூண்டுகோலாக அமையும் என்பதோடு வெளிநாடுகளில் குடியேறி வாழ்க்கை நடத்திவரும் தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் இதுபோன்ற ஆராய்ச்சிகளின் விளைவுகளால் மேலும் சிறப்புற்று விளங்கும் என்பதில் எங்களுக்கு முழு நம்பிக்கை உண்டு.

**புகழ் விரும்பி சேவை செய்யாதே**
**உனது மனதிற்கு திருப்தி ஏற்பட**
**தேவை அறிந்து சேவை செய்.**

**பல ஆண்கள் தங்களுக்கு சீதைபோல் ஒருத்தி வேண்டும் என்று கனவு காண்கிறார்கள் ஆனால் அவர்கள் சீதைக்கேற்ற இராமனாக இருக்க தவறி விடுகின்றார்கள்.**

# இருதய நோய்

இருதய நோய் இன்று உலகில் உயிர் கொல்லி நோய்களில் ஒன்றாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் மாரடைப்பு (heart attack) இறப்புக்கு முதன்மையான காரணியாக இருக்கின்றது. அபிவிருத்தியடையும் நாடுகளில் தொற்று நோய்களுக்கு அடுத்தபடியாக இருதய நோய் விளங்குகின்றது.
இருதய நோய்கள் என்று பொதுவாக அழைக்கும் போது, அதில் பல நோய்கள் அடங்குகின்றன. ஆனால் இக்கட்டுரையில் இவைகள் அனைத்தைப் பற்றியும் எடுத்தியம்புதல் முடியாது. எனவே நான் இங்கு (heart attack) என்று அழைக்கப்படும் இருதயத்தாக்கு நோய் பற்றியே விளக்க இருக்கின்றேன்.

## *இருதயத்தாக்கு நோய் என்றால் என்ன?*


இவற்றில் இருபிரிவுகள் உள்ளன. முதலாவது, பிரிவு Angina என்று அழைக்கப்படுகிறது. இதனை **நெஞ்சு நோவு** என்று அழைப்போம். இந்த நோவானது ஒரு குறுகிய நேர இடைவெளியில் மறைந்துவிடும். அனேகமாக உடற்பயிற்சி செய்யும் போது அல்லது உணர்ச்சிவசப்பட்ட நிலைகளின் போது ஏற்படும். இந்த நோவானது நெஞ்சின் மத்தியிலேயே உணரப்படுகின்றது. சாதாரணமாக இந்த நோவு கழுத்து, முதுகுப்புறம், புயங்கள் அல்லது நாடிக்கும் பரவலாம். இந்த நோவு சாதாரணமாக நெஞ்சைக் கசக்கி பிழிவது போல அல்லது நெஞ்சில் ஒரு 'பாரமாக" (heaviness) இருக்கும்.
அனேகமாக 10–30 நிமிடங்கள், வரை இந்த நோவு நூடிக்கலாம். இருதய நோவு எல்லோருக்கும் மேலே குறிப்பிட்டவாறு ஏற்படுவதில்லை. நோவின் தன்மை (character), நேரம், பரவல் (radiation) ஒருவருக்கொருவர் வித்தியாசப்படலாம்.
சிலருக்கு நோவு கட்டாயமாக உடற்பயிற்சி செய்யும் போது தான் ஏற்படும் என்பதில்லை. ஓய்வாக இருக்கும் போதும் கூட நோவு ஏற்படலாம்.

இரண்டாவது வகையான இருதய நோவு அல்லது (myocardial), எனப்படும் இது மிகவும் பாரதூரமான நோய் ஆகும். இந்த நோவு மேலே குறிப்பிட்ட (Angina) நோயைப் போல இருப்பினும் மிகவும் கடுமையாகவும் நூண்ட நேரமும் நூடிக்கும். அத்துடன் வியர்த்தல், வாந்தியெடுத்தல், நெஞ்சுப்பட படப்பு, மூச்சுத் திணறல் போன்றவையும் ஏற்படும். உடனடியாக வைத்திய உதவி செய்யாவிடில் உயிருக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

## *இருதய நோவு எப்படி உண்டாகிறது?*

இருதயமானது உடலுக்கு குருதியை சுற்றியோட்டுவதற்கு பம்பியாக

(pump)தொழிற்படுகிறது. இருதயம் தசைக்கலங்களால் ஆக்கப்பட்ட ஒரு உறுப்பு. இருதயதிற்கு குருதியை காவிச்செல்வதற்கு இரண்டு நாடிகள் (arteries) இருக்கின்றது. வலது, இடது இருதய நாடிகள். (படம் –1)




இருதய நோய் உள்ளவர்களுக்கு இந்த நாடிகளின் சுவர்களில் கொழுப்பு மற்றும் நார்த்தன்மையான படிவுகள் (deposits) ஏற்படுவதால் இருதயதுக்கு குருதியை கொண்டு செல்லும் நாடிகளின் விட்டம் குறைகிறது.

இதனால் இருதயத்துக்கு தேவையான குருதியையும் பார்க்க குறைந்த அளவு குருதியே கிடைக்கின்றது. உடற்பயிச்சி மற்றும் உணர்ச்சிவசப்பட்ட நேரங்களில் இருதயம் வேகமாக குருதியை அனுப்ப வேண்டி ஏற்படுகிறது. ஆனால் நாடிகளின் சுவர்கள் தடிப்பான நிலையில் தேவையான குருதியை கொண்டு செல்ல முடிவதில்லை. இருதியத்திற்கு குருதி குறைவாகக் கிடைக்கும் போது ஒட்சிசன் மற்றும் போசனைப்பொருட்கள் குறைவாகவே கிடைக்கிறது. இதன் விளைவாகவே நோவு ஏற்படுகிறது. இது யுபெயை எனப்படுகின்றது. குருதி ஓட்டம் முற்றாக தடைப்படின் இருதய தவைக்கலங்களை மீளப் புதுப்பிக்க முடியாத அளவுக்கு இறந்து போகின்றன. இது (heart attack) எனப்படும. இது இருதயத்திற்கு நிரந்தரமான முறையில் பாதிப்பை ஏற்படுத்தி பலவீனப்படுத்துகின்றது. சிலவேளைகளில் இறப்பையும் ஏற்படுத்துகின்றது.

## இருதய நோயை எப்படி கண்டுபிடிக்கலாம் (diagnosis)?

நெஞ்சில் ஏற்படும் நோவு எல்லாம் இருதய நோய் அல்ல. நெஞ்சுப் பகுதியில் இருதயம் தவிர்ந்த ஏனைய பல உறுப்புகளும், இழையங்களும்(tissues) இருக்கின்றன. இவற்றினாலும் நோவு ஏற்படலாம். உதாரணமாக சுவாசப்பை, களம், விலாஎலும்புகள், தசைகள். ஆனால் இருதய நோயின் தன்மைகள் மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து பல விதங்களில் வேறுப்பட்டு நிற்கின்றது.

## இருதய நோயை எப்படி வைத்தியர்கள் கண்டுபிடிக்கிறார்கள்?

நோயாளி நெஞ்சு நோயின் தன்மையைப் பற்றி விபரிக்கிறார். அத்துடன் வேறு சில காரணிகள் (risk factors) பற்றியும் வைத்தியர் வினாவுவார். உதாரணமாக புகைப்பிடித்தல், பரம்பரை(அல்லது இருதய நோயினால் பாதிக்கபட்ட உறவினர்கள்), உணவுப் பழக்கவழக்கம், மதுபானம் அளவுக்கு அதிகாமாக பாவித்தல், உடலுழைப்பின்மை, குருதியில் அதிகரித்த கொலஸ்டிரோல் (cholestrol)என்னும் கொழுப்பின் அளவு என்பனவற்றை (risk factors) என்று அழைப்பர். அத்துடன் சல்ரோகம் (diabetes), உயர் குருதியமுக்கம் (high blood pressure) போன்றனவும் இருதயத்தாக்கு நோய் ஏற்படுவதற்கு காரணிகளாக அமையலாம்.

அத்துடன் ஒரு சில சோதனைகள் (tests) செய்யவேண்டியும் ஏற்படலாம் ECG, எக்ஸ்ரே, blood tests. அத்துடன் சந்தேகத்திற்கு இடமான நோயாளிகளின் (a typical chest pain), வேறு சில விஷேடமான சோதனைகள் செய்துபார்க்கவேண்டிய அவசியம் ஏற்படலாம். உடற்பயிற்சி செய்யும் போது இருதயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிவதன்மூலமும் (exercise, ECG tests) இருதய நாடிகளை X-ray படம் பிடிப்பதன் மூலமும் (coronary angiogram) இருதய நோய் பற்றி தெளிவாக கண்டு பிடிக்கலாம்.

## எப்படி குணப்படுத்தலாம்?

இருதய நோய் வருமுன் காப்பது நல்லது. பின்வரும் அறிவுரைகள் கடைப்பிடிப்பதன் மூலம் இருதய நோயை முற்றாக தவிர்க்க முடியாவிட்டாலும் கட்டுப்படுத்தலாம்.

- புகை பிடிக்காமை
- அளவோடு மதுபானம் அருந்துதல் (2-3 drinks per day)
- தேகப்பயிற்சி செய்தல்
- உணவில் அதிகளவு கொழுப்புப் பதார்த்தங்கள், எண்ணெய் வகைகளை தவிர்த்து, பச்சை காய் கறி வகைகள், பழங்கள், மாப்பொருட்களின் அளவை அதிகரித்தல்.
- அளவான எடை (healthy weight)
- சலரோக நோயாளிகள், குருதியமுக்க நோயளிகள் தமது நோயை ஒழுங்காகக் கட்டுப்படுத்தல் (control blood pressure and blood suger ).

இறுதியாக வந்த பின்னர் எப்படிக் காப்பது என்பது பற்றி பார்ப்போம். இருதய நோயை முற்றாக குணப்படுத்தாவிடினும், கட்டுப்படுத்தி சாதாரண வாழ்க்கை நடத்தலாம்.

நவீன மருந்து வகைகள், அறுவைச் சிகிச்சை (coronary by pass surgery, Angio.....) என்பனவற்றினால் இருதய நோயாளிகளின் வாழ்வுகாலம்இருபதாம் நூற்றாண்டில் அதிகரித்துள்ளது.


பனி
பெய்யும்
இரவுகள்
ராஜேஸ்வரி
பாலசுப்பிரமணியம்
நூல்
விமரிசனம்

# படித்தோம் சொல்கின்றோம்

**கமலா முகுந்தன்**

# பனிபெய்யும் இரவுகள்

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய நாவல்

ஈழத்தின் இனப்பிரச்சினை, ஈழத்து இலக்கிய வளர்சிக்கும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியது. ஈழத்திலிருந்து அந்நிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்த படைப்பாளிகளினால் இப்புதிய பரிமாணங்களுக்கு உரமும் உருவமும் வழங்கியவர்களின் வரிசையில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் குறிப்பிடத்தகுந்தவர்.

ஈழத்தமிழர் தஞ்சம் புகுந்த நாடுகள் தோறும் வெளியாகும் பத்திரிகைகள் – சிற்றேடுகளில் மாத்திரமன்றி தனி நூல்களிலும் (நாவல்களில்) தமது எழுத்து வண்ணங்களை பதித்துக்கொண்டிருக்கும் ராஜேஸ்வரியின் மற்றுமொரு நாவல் ‘பனிபெய்யும் இரவுகள்’.

ஈழத்திற்கு வெளியே வாழும் ஈழத்துப் படைப்பாளிகள் பலர் இன்னும் – தமது இலக்கிய ஆற்றல் வற்றிப்போகாமல் காத்திரமான படைப்புகளை வழங்கிக் கொண்டிருப்பது ஆரோக்கியமானது.

ராஜேஸ்வரி இந்த ஆரோக்கியமான வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை தமது நாவல்களின் மூலம் வழங்கியிருக்கிறார்.

காரணம் – அடுத்தடுத்து அவர் பகைப்புலமாகக் கொண்டு எழுதிய – நூலுருவாக்கிய நாவல்கள்.

அந்த வரிசையில் அவரது ‘பனிபெய்யும் இரவுகளை’ பார்ப்போம்.

இந்நாவலில் நிறைய பாத்திரங்கள். தியாகராஜன் என்ற தியாகு – அவன் மணம்முடிக்கவிருக்கும் ராதிகா, தியாகுவின் மச்சாள் முறையான சாரதா – அவள் கணவன் இராமநாதன்...... இப்படியாக நான்கு பாத்திரங்களையே ஆதாரமாக கதை சுற்றிச் சுழன்ற போதிலும் கதையுடன் சம்பந்தப்பட்ட பாத்தரங்களாக தியாகுவின் பெற்றோர் – சாரதாவின் தந்தை சத்தியமூர்த்தி – அவரின் யாழ்ப்பாண மனைவி செல்வமலர், மலையகத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் உறவு வைத்துக்கொண்ட செந்தாமரை – என்று பல உப பாத்திரங்கள் இந்நாவலில் நிறையவே வருகிறார்கள்.

இந்நாவலை இரண்டு கதைகளாகவும் பிரித்துப் பார்க்கமுடியும்.

தியாகு – ராதிகா– சத்தியமூர்த்தி – செந்தாமரை – இரண்டு சோடிகளுமே – வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

ராதிகா மூலம் லண்டன் வாழ்வும் – செந்தாமரை மூலம் இலங்கையின் மலையக வாழ்வும் சித்தரிக்கப்பட்ட நாவல் பனிசெய்யும் இரவுகள்.

ஆண்–பெண் உறவுகளில் ஏற்படும் நெருடல்களை வெகுதுல்லியமாக இனம் காட்டுவதில் ராஜேஸ்வரி நல்லவர் என்பதற்கு இந்நாவலும் மற்றுமொரு சான்று.

சத்தியமூர்த்தி – செந்தாமரை உறவு 1958ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவர பின்னணியில் மலையகத்தில் உருவாகிறது –
தியாகு – ராதிகா – காதல் 1983 இன் பின்பு தோன்றிய லண்டன் புகலிட வாழ்வினை பின்னணியாகக் கொண்டது.

சுமார் கால் நூற்றாண்டு இடைவெளி இதன் மூலம் துலக்கமானது.

சத்தியமூர்த்தி ஏற்கனவே திருமணமானவர் என்பது தெரிந்துகொண்டு, “எனக்கொரு மஞ்சள் கயிறு போதுமய்யா, தங்கத்தால் வேண்டாம் என்றுசொல்லி அவர் வாழ்வில் இணைந்துகொண்ட செந்தாமரை – காதலன் – வருங்காலக் கணவன் தியாகுவுடன் முரண்பட்டு – ஊடல்கொண்டு, “எனது ஸ்ரேட்டஸை பார்ப்பதானால் நான் பாரதி போன்ற டொக்டரைக் கட்டலாம்தானே” எனக் கூறி தியாகுவின் மனதை புண்படுத்தும் ராதிகா – இந்த இரண்டு பாத்திரங்களுமே –பெண்மையின் வெவ்வேறு வடிவங்கள்தான்.

ராதிகா தியாகுவின்மீது சந்தேகம் கொள்வது அர்த்தமற்றது. காரணம் வலுவாகச் சொல்லப்படவில்லை. சத்தியமூர்த்திக்கும் செந்தாமரைக்கும் பிறந்த பெண் சாரதா – தியாவுக்கு முறை மச்சாள். சாரதாவும் ராமநாதன் என்பவரை மணந்து லண்டனில் வாழ்கின்றவர்.

சாரதாமீது தியாகுவுக்கு ஏற்பட்டது மனிதாபிமான அன்புணர்வுதான். இதனைத் தவறாகப் புரிந்துகொண்டே ராதிகா – தியாகுவை மனதாலும் செயல்களாலும் துன்புறுத்துகிறாள்.

இறுதியில் தனது திமிர்வாதம் – ஆணவம் மற்றாக களைந்து நிராயுதபாணியாக தியாகுவிடம் சரண் அடைகிறாள் ராதிகா.

அப்பொழுதுங்கூட, உங்களுக்கு என்னில் விருப்பமில்லை என்றால் நீங்கள் போட்ட மோதிரத்தை திருப்பித்தர வந்திருக்கிறேன் என்றுதான் சொல்கிறாள்.

பெண்மைக்கே உரித்தான சீண்டல்' இது. இந்தவகையில் பாதிதரவார்ப்பில் முழுமையுண்டு.

தியாகுவும் ராதிகாவும் மீண்டும் இணைவதுடன் நாவல் முற்றுப்பெறுகிறது.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்ற வசனத்துடன் நாவலை முடித்திருக்கவேண்டியதில்லை. இது அவசியமற்ற வசனம்.

எழுத்தாளனின் திறமை வாசகனின் சிந்தனையில் ஊடுறுவதில்தான் தங்கியுள்ளது. பெரும்பாலான எழுத்தாளர்கள் விடும் தவறையே ராஜேஸ்வரியும் இந்நாவலின் இறுதியில் இவ்விதமாக இனம் காட்டுகின்றார்.

எனினும் ஈழத்தமிழர் வாழ்வின் பன்முகத் தோற்றங்களை சித்தரிக்கும் நாவல்களின் வரிசையில் பனிபெய்யும் இரவுகள இடம்பெறுகிறது.


ECCTA
Builders
Design, constructions, Renovation & Alterations
Mano Sivagru
Homebush NSW
Tel:764 2064

# உங்களுக்குத் தெரியுமா ?

*வாசகர்களே!*

சிட்னி தமிழர்களின் அயரா முயற்சியால் குறுகிய காலப்பகுதியில் பல தமிழ் வானொலி ஒலிபரப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, தமிழ்ப்பாடல்கள், நாடகங்கள், கருத்துப்பரிமாற்றங்கள் என்பனபோன்ற பல அரிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றதை பார்க்கும்போது நாம் ஒஸ்ரேலியாவில்தான் இருக்கின்றோமா என எண்ணத்தோன்றுகின்றது. வாசகர்களின் நன்மை கருதி அவை பற்றிய விபரங்களை தருகின்றோம்.

1. **தமிழ் முழக்கம்**

   றேடியோ வேள்ட் 2000 இல் பிரதி சனிக்கிழமை தோறும் FM 98.5 MHz அலைவரிசைகளில் இரவு 7.45 மணி முதல் 10 மணி வரை இடம்பெறுகின்றது.

2. **முத்தமிழ் மாலை**

   றேடியோ 2CCR இல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் FM 90.5 MHz அலைவரிசைகளில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை இடம்பெறுகின்றது.

3. **உதயசூதம்**

   பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் FM 100.3MHz அலைவரிசைகளில்
   பகல் 12 மணி முதல் 1 மணிவரை நடைபெறுகின்றது.

4. **மாலை மதுரம்**

   பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் FM 88.7 MHz அலைவரிசைகளில்
   இரவு 8 மணி முதல் 10 மணிவரை நடைபெறுகின்றது.

5. **SBS தமிழ்ச்சேவை**

   SBS றேடியோவில் பிரதி ஞாயிற்றுகிழமை தோறும் FM 97.7 MHz அலைவரிசைகளில் காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை நடைபெறுகின்றது.

# கலப்பை சொல் நிரப்பல் போட்டி இல.1

இப்போட்டியில் கலப்பை உறுப்பினர்கள், குடும்பத்தினர் கலந்துகொள்ள முடியாது என்பதை முதலில் கூறிவைக்கவிரும்புகின்றோம்

## மேலிருந்து கீழ்

**2.** பத்திரிகையின் செய்திகளுக்கு முக்கியமான ஒருவர் இங்கு குழம்பியுள்ளார்
**3.** பிழையானவற்றை செய்ய பலரும் இது காட்டுவார்கள்
**6.** இதைவாசிப்பதன்மூலம் உலக நிலவரத்தை புரிந்துகொள்கிறோம்
**11.** வெகுமதி மிக்க பொருட்களை நம் முன்னோர் இதனுள் பூட்டி வைப்பார்கள் இது இங்கு குழம்பியுள்ளது.
**13.** நிலத்தை பண்படுத்தும் இது இப்போ உங்கள் கைகளில் உள்ளது.
**28.** பெண்ணின் எதிர்ச்சொல் தலைகீழாக உள்ளது.

## இடமிருந்து வலம்

**1.** வயலும் வயல் சார்ந்த இடத்தையும் புலவர்கள் இப்படிக் கூறுவார்கள்.
**8.** தினமும் என்ற சொல்லின் ஒத்த கருத்துள்ளசொல் இங்கு குழம்பியுள்ளது.
**13.** புத்தகத்தில் இவற்றை தட்டிப்பார்ப்போம், இங்கே குழம்பி கடை எழுத்து விடுபட்டுள்ளது.
**17.** விளையாட்டு மைதானத்தை இப்படியும் அழைக்கலாம், முன்பின்னாக மாறியுள்ளதுடன் கடை எழுத்தும் விடுபட்டுள்ளது.
**19.** நிறம் என்ற தமிழ்ச்சொல்லை அதிகமாக ஆங்கிலத்திலேயே கூறுவது நடைமுறையில் உள்ளது எனவே குழம்பியுள்ளது.
**23.** உலகின் மிகப்பெரிய மிருகம் இங்கே இருக்கிறது.
**27.** கணவனை இழந்தவள் இங்கு குழம்பியுள்ளாள்.
**31.** இனிய தழிழை இத்தமிழ் என அழைப்பார்கள்.
**34.** நாட்டின் அதிகாரத்தை இதில் உள்ளவர்கள் வைத்திருப்பார்கள், கடை எழுத்து விடுபட்டுள்ளது.

வாசகர்களே இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு இச் சஞ்சிகையின் நடுப்பக்கத்தில் இணைக்கப்பட்டிருக்கும் சொல்நிரப்பல் போட்டிக்கான சதுரங்களைப் பாவிக்கலாம், சரியான விடைகளை அனுப்புவோரின் பெயரும், சரியான விடையும் அடுத்த கலப்பை இதழில் பிரசுரிக்கப்படும், சரியான விடைகளை அனுப்புவோரில் அதிர்ஸ்டசாலியான ஒருவருக்கு ஒருவருட கலப்பை இதழ்கள் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.
விடைகளை 24.9.94 இற்கு முன்பாக கலப்பை முகவரிக்கு அனுப்பிவையுங்கள், ஒருவர் எத்தனை விடைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
**சதுரங்கள் மறுபக்கத்தில் உள்ளன.**

# சொல் நிரப்பல் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

பெயர்.................................................................

முகவரி.................................................................

தொலைபேசி இலக்கம்..............................

முழுமையாக நிரப்பப்பட்ட இத்தாளை 24-9-94 க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**`Kalappai'**
Sydney University Tamil Society
P.O.Box 40
Wentworth Building
University of Sydney
SYDNEY, NSW-2006
AUSTRALIA

# KALAPPAI

## கலப்பை சந்தா விண்ணப்பப்படிவம்

## SUBSCRIPTION FORM

அன்பு வாசகர்!

1994 ஜுலை மாதம் முதல் காலாண்டு சஞ்சிகையாக வெளிவரும் கலப்பை உங்கள் கைகளில் தவளுகின்றது. இதனை நீங்கள் வாசிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் கலை இலக்கிய ஆர்வலர்களுக்கும் அறிமுகப்படுத்தவும்.

NAME : ..............................................................................................

ADDRESS: ..............................................................................................

PHONE:............................

SIGNATURE

ALLCHEQUES IN FAVOUR OF
"Sydney University Tamil Society"

**ஆண்டுச் சந்தா**

உள்நாடு :- **Aus $ 10.00**

வெளிநாடு :- **Aus $ 15.00**

தனிப்பிரதி :- **Aus $ 2.00**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்

புலம் பெயர்ந்து வாழும் எம்மக்களிடையே தமிழ் மொழியையும் தமிழ் கலாசாரத்தையு வளர்க்கவேண்டுமென்ற ஆர்வம் பெருகியுள்ளது. குறிப்பாகப் பல்கலாசாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடான அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற தமிழ் மக்களிடையே இந்த ஆர்வம் பெருமளவில் காணப்படுகின்றது. இதன் காரணமாக இங்கு பல தமிழ் வளர்க்கும் சங்கங்கள், மன்றங்கள், கலை நிலையங்கள் ஆகியன ஆரம்பிக்கப்பட்டுச் செயலாற்றிவருகின்றன. தமிழையும் தமிழ்கலாசாரத்தையும் வளர்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிங்கப்பட்ட இத்தகைய சங்கங்களில் ஒன்றுதான் சிட்னி பல்கலைக்கழக தமிழ் சங்கம். 1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் சிட்னி மாநகரில் அரும் பெரும் தமிழ் பணி ஆற்றிவருகின்றது.

இச்சங்கம் பல்கலைக்கழக நிதியம் (UNIFUND), தமிழ் ஊக்குவிப்புப் போட்டி, தமிழ் சஞ்சிகை வெளியிடுதல் ஆகிய மூன்று முக்கிய செயல் திட்டங்களை ஆரம்பித்துச் செயற்படுத்திவருகின்றது. இவ்வாண்டு முற்பகுதியிலே இடம்பெற்ற தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றி இங்கு விரிவாகக் குறிப்பிட விரும்புகிறோம். சென்ற வருடம் ஒக்தோப மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலுள்ள தமிழ் கல்விநிலையங்களிலே பயில்கின்ற தமிழ் மாணவர்களிடையே தமிழ் பயிலும் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்று கூறினால் அது மிகையாகாது. போட்டிகள் நடாத்துவதுபற்றி தமிழ் ஊக்குவிப்புப் போட்டி உபகுழு தமி கல்விநிலையங்களின் நிர்வாகத்தினருடன் கலந்தாலோசித்த பின்னர் இப்போட்டிகள் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் பயிலும் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் அபிமானிகள் ஆகியோர் இப்போட்டிகளை நடாத்துவதற்குப் பெரும் ஆக்கமும் ஊக்கமும் நல்கினர். கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆறு போட்டிகள் வெவ்வேறு வயதுப்பிரிவினருக்கிடையே நடாத்தப்பட்டன.

| | |
|---|---|
| பாடல் மனனப் போட்டி | 8 வயதிற்குட்பட்டோர் |
| பேச்சுப் போட்டி | 8 வயதிற்கும் 10 வயதிற்கும் இடைப்பட்டோர். (தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றோர்), |
| விநாடி வினா | 11 வயதிற்கும் 13 வயதிற்கும் இடைப்பட்டோர். (தமிழை முதல் மொழியாகக் கற்றோர்) |
| விநாடி வினா | 11 வயதிற்கும் 13 வயதிற்கும் இடைப்பட்டோர். (தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றோர்) |

| | |
|---|---|
| விவாதம் | 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்டோர். (தமிழை முதல் மொழியாகக் கற்றோர்) |
| விவாதம் | 14 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்டோர். (தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றோர்) |

எட்டு வயதிற்கும் பத்து வயதிற்கும் இடைப்பட்ட வயதுப் பிரிவினரில் தமிழ் மொழியை முதல் மொழியாகக் கற்றோருக்கான பேச்சுப் போட்டிக்கு எவரும் விண்ணப்பிக்காததால் இப்போட்டி நடைபெறவில்லை.

இப்போட்டிகளில் பல தமிழ் மாணவர்கள் பெரும் ஆர்வத்துடனும் ஊக்கமுடனும் பங்குபற்றினார்கள். போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகளைத் தட்டிச்சென்ற மாணவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. பாடல் மனனப் போட்டி

| | |
|---|---|
| முதலாம் பரிசு | செல்வி லவண்யா லிங்கம் |
| இரண்டாம் பரிசு | செல்வன் பிரியந்தன் பிரபாகரன் |
| மூன்றாம் பரிசு | செல்வி தர்ஷிணி பகீரதன் |

*ஆறுதல் பரிசுகள்*

| | |
|---|---|
| செல்வி தாரணி தவபாலச்சந்திரன் | செல்வி சுபாங்கி மகேந்திரராஜா |
| செல்வி மீரா மீனாட்சிசுந்தரம் | செல்வன் சரவணன் அருணாசலம் |
| செல்வி மாதங்கி ஜெகதீஸ்வரன் | செல்வி வாணி நித்தியானந்தன் |
| செல்வி சர்மிலி குணசிங்கம் | செல்வன் பிரசன்னா பிரபாகரன் |
| செல்வன் கார்த்திக் பிரபாகரன் | செல்வன் சஞ்சயன் கோணேசமூர்த்தி |

2. பேச்சுப் போட்டி (தமிழ் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்றோர்)

| | |
|---|---|
| முதலாம் பரிசு | செல்வி தனுஷா சபாநாதன் |
| இரண்டாம் பரிசு | செல்வன் முகுந்தன் குணசிங்கம் |
| மூன்றாம் பரிசு | செல்வி சுஜித்தா தவபாலசந்திரன் |

*ஆறுதல் பரிசுகள்*

| | |
|---|---|
| செல்வி லாவண்யா தேவராஜா | செல்வன் ராஜேஸ் ஜெகதீஸ்வரன் |
| செல்வன் முரளி ஜெகதீஸ்வரன் | செல்வி லக்ஷ்மி மனோகரன் |
| செல்வி பாஹினி சிவகுமார் | செல்வி மயூரதி சிவபாதசிங்கம் |

3. விநாடி வினாப் போட்டி (தமிழை முதல் மொழியாகக் கற்றோர்)

| | |
|---|---|
| முதலாம் பரிசு | செல்வி வனஜா சிவபாதசிங்கம் |
| இரண்டாம் பரிசு | செல்வி சாய்பிரியா பாலசுப்ரமணியம் |
| மூன்றாம் பரிசு | செல்வன் கிரிதர் பரமேஸ்வரன் |

4. விநாடி வினா (தமிழை இரண்ட ாவது மொழியாகக் கற்றோர்)

| | |
|---|---|
| முதலாம் பரிசு | செல்வி தாரிணி மீனாட்சிசுந்தரம் |
| இரண்டாம் பரிசு | செல்வி சாம்பவி பரிமளநாதன் |
| மூன்றாம் பரிசு | செல்வி சிறியா முத்துசாமி |

5. விவாதப் போட்டி (தமிழை முதல் மொழியாகக் கற்றோர்)

*வெற்றிபெற்ற குழு*
செல்வன் மகேஷ் ராதாகிருஷ்ணன்
செல்வி மைத்திலி சிவராமன்
செல்வி அனுஷா அர்ச்சுனமணி

6. விவாதப் போட்டி (தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றோர்)

*வெற்றிபெற்ற குழு*
செல்வன் இராகுலன் ஜெகதீஸ்வரன்
செல்வி கௌரி சண்முகநாதன்
செல்வி வாணி ஹரிசந்திரன்

போட்டிகளில் வெற்றி பெற்றோர் இவ்வாண்டு மார்ச் மாதம் 12ஆந் திகதி நடைபெற்ற "கலைக்கதம்பம் 94" என்ற கலைநிகழ்ச்சியன்போது பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வெற்றிபெற்றோருக்கு வழங்கிய பரிசில்களையும் வெற்றிக்கேடயங்களையும் வாங்குவதற்கு அன்பளிப்புக்கள் நல்கிய வர்த்தக நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட தமிழ் அபிமானிகளுக்கும் மற்றும் இப்போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்றித் துணைபுரிந்த தமிழ் அறிஞர்களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை சிட்னி தமிழ் மக்கள் பெரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எனவே அடுத்த ஆண்டு தமிழ் மாணவர்கள் இப்போட்டிகளில் பெருமளவில் பங்குபற்றுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டுதோறும் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் எமது சிறார்கள் தவறாமல் பங்குபற்றி இப்போட்டிகளால் கிடைக்கக்கூடிய முழுப் பயனையும் பெறுவார்களென்று நம்புகிறோம்.

# முத்தமிழ்

*(இவ்வாண்டு நடைபெற்ற சிட்னி பல்கலைக்கழக தமிழ் சங்கத்தின் தமிழ் ஊக்குவிப்புப் போட்டியில் முதல் பரிசுபெற்ற செல்வி தனுக்ஷா சபாநாதனின் பேச்சு)*

தமிழின் இயல், இசை, நாடகங்களை முத்தமிழ் என்று நம்முன்னோர் வகுத்துள்ளனர். இந்தப் பிரிவுகள் தமிழ்ச் சொல் ஓவியங்களை என்றென்றும் தமிழர் இனிது படித்து உணர்ந்து உவகை கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இன்றுள்ள உலக மொழிகள் பலவற்றில் இலக்கியம் என்பதே எட்டிப்பாராதிருந்த காலத்தில் நம்முன்னோர் சங்கமாகக் கூடியிருந்து தமிழை ஆராய்ந்தனர். பேரறிஞர் ஒன்று கூடி ஓசை நயம் பூண்ட தமிழால் என்றும் நிலைத்திருக்கக் கூடிய மொழி ஓவியங்களைப் படைத்த நிறுவனமே சங்கமென்பது.

முத்தமிழ் முதற் சங்க காலத்திலேயே பிறந்து விட்டதாக நம்பப்படுகின்றது. முதல் சங்ககால இலக்கியங்களில் காலத்தால் அழியாதிருக்கும் தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகும்.

இலக்கியம் உருவானதால்தான் இலக்கணம் உருவானது என்பது மரபு. ஆகவே தொல்காப்பிய காலத்திலேயே முத்தமிழ் இலக்கியங்கள் உருவாகியிருக்கவேண்டும்.

முற்காலத்து முத்தமிழ் நூல்கள் ஏராளம். சங்ககால இலக்கியங்களில் இன்றுவரை நிலைத்திருக்கும் முத்தமிழ் நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெரும்காப்பியம் என்பன.

இவைகளில் பெரும்பான்மையானவைகள் வாழ்வின் கோட்பாடுகளையும், வாழ்வின் முறைகளையும் வகுத்துத் தந்துள்ளன. உதாரணமாக, அகநானூறு, அன்பு, காதல், இரக்கம் போன்ற உள் உணர்வுகளையும், புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்கள் புறச் செய்திகளையும் கூறுகின்றன.

தமிழ் இலக்கியம் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை மூன்றாய் வகுக்கப்பட்டு இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் மரபிலிருந்து தவறாமல் இருக்கின்றது அதாவது பண்டைய இலக்கியங்கள், நாட்டியங்கள், நடனங்கள் யாவிலும் வசனப் பேச்சுக்களும் முத்தமிழை இணைத்தேயிருந்தன. காலப்போக்கில் முத்தமிழ் பிரிவுகள் தனித்தனியாகவும் இணைந்தும் வளர்ந்துள்ளன.

இயல் என்பது கட்டுரை, கடிதம், நாவல், கதை என்ற தோற்றங்களைக் கொண்டுவந்துள்ளது.

இசை என்பது பாடல், கவிதை, வெண்பா, குறும்பா என்று பல்வேறு தோற்றங்களிலும் அளவுகளிலும் பெருகியுள்ளது.

நாடகமென்பது நாட்டியம், நாட்டிய நாடகம், கூத்து, நாட்டுக் கூத்து, தெருக்கூத்து என்று பல பாணிகளில் உருவாக்கப்படுகிறது.

முத்தமிழ் தமிழர்களால் மட்டுமன்றி தமிழ்த் தெய்வங்களாலும் போற்றி வளர்க்கப்பட்டுள்ளது. தமிழில் என்னைப் பாடு என்று இறைவன் இட்ட பணிப்பில் அருணகிரிநாதர் திருப்புகழ் பாடினார். முருகன் தமிழ் என்னும் அமிழ்தை உண்ட தமிழ்த் தெய்வம் என்று போற்றப்படும் தெய்வம்.

தேவாரம், திருவாசகம், திருப்புகழ் என்று இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் நமது வாழ்வில் பிரிக்க முடியாத அங்கமாகிவிட்டன.

முத்தமிழ் இலக்கியங்களின் பெயர்களைக் கூறுவதென்றால் நாட்கணக்கில் கூறிக்கொண்டிருக்கலாம். உதாரணமாக, அகநானூறு, புறநானூறு, பரிபாடல், கலித்தொகை ஆகிய எட்டுத்தொகைகளில் தொடங்கி, கந்தபுராணம், பெரியபுராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி ஊடாக நடந்து பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற கவிஞர்களை மட்டும் தொட்டு நிறுத்திக்கொள்கிறேன்.

# சிட்னியில் தமிழ்

–வேந்தனார் இளங்கோ–

தேமதுரத் தமிழோசை தேசமெலாம்
தேனாகப் பாயத் தேடவேண்டும் வழியென
தூந்தமிழ் கவிதை தூட்டிவைத்தனன்
தித்திக்கும் கவிதந்த திறனாளன் பாரதி

அத்தமிழ் கவியின் ஆசையது
அகிலத்தில் நிறைவுறும் நாளேது
முத்தமிழ் இவ்வுலகில் மீண்டும்
முதலிடம் பெறும் நாளேது

இனிதென்றான் தமிழை எங்கள் பாரதி
இல்லை வேறுமொழி இணையென்றான்
இனியதமிழ் என்னுயிர்க்கு நேர் என்றான்
இளையவன் கவி பாரதிதாசன்

இனிதென்றும் என்னுயிரென்றும்
எம்மவர் ஏற்றிட்ட இணையில் தமிழ்
இனியிவ்வுலகில் ஏற்றநிலை யடையும்
எழில்மிகு நாளேது இயம்பிடுவரோ

பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பல் கரையும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்

மேடையில் பலர்சொல்லும் கவியிதை
மேன்மையுடன் எழுதிவைத்தான் ஒருபுலவன்
நாடைநாம் துறந்து நாடெங்கும் வாழ்வினும்
நாமறிவோம் நற்றமிழ் பாட்டிதனை

மேடையில் தமிழென மிக அழகாய்க் கூறிவிட்டால்
மேதினியில் தமிழ் மீண்டும் சிறந்திடுமோ
ஆடையில் ஆங்கில வாசனை நம்மில் பலர்
அசைவிலும் ஆங்கில வாசனை

கொடியினில் மலர் இருந்தால் அன்றோ
கூடையில் பறித்துப் போட்டிடலாம்
வெடியினில் மருந்து இருந்தால் அன்றோ
வேண்டும் போது அது வெடித்திடலாம்

கொடியினில் மலராக வெடியினில் மருந்தாக
கொண்டிட வேண்டும் தமிழை வாழ்வில்
முடிவினில் வெற்றி முழுதாய் நமக்கே
முடிவாய் நானுரைப்பேன் முத்தமிழின்பெயரால்

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
தமிழில் இதைப்பாடிவைத்தார்
தனிப்பெருங்கவி நாமக்கல்

இழப்பினைத் தமிழன் இலகுவில் ஏற்றிடான்
இழந்ததை மீண்டும் எடுத்திடாது ஓயான்
உழைப்பின் பயனால் உன்னத நிலையை
உண்மையில் அடையும் ஒருதிறனாளன்

இல்லாததில் இருப்பதைக் காண்பவன்
எங்கள் தமிழன் இது அவன் குணம் – அன்று
இல்லாத தமிழிங்கு சிட்னியிலின்று இயலாக
இசையாக கலையாக இருப்பதைக் காணீரோ

சிட்னியில் தமிழ் சிறகடித்துப் பறக்கிறது
செல்லு மிடமெல்லாம் சிங்காரத் தமிழது
கட்டிக் கரும்பாக கண்ணுக்கு விருந்தாக
கவியுருவில் கலையுருவில் கருத்தைப் பறிக்கிறது

பந்தடிப்போம் நாங்கள் பந்தடிப்போம் என
பக்குவமாய் பாடியாடும் பாலர்கள் ஒருபுறம்
செந்தமிழ் கவிபாரதி சீர்மிகு சோமசுந்தரப்புலவர் என
சிந்தனையைத் தூண்டும் சிறார்கள் ஒருபுறம்

ஔவைக்கு நெல்லிக்கனி – அதை ஆனந்தமாய்
அவையினில் கொடுத்திடும் குழந்தைகள் ஒருபுறம்
இவ்வளவும் மட்டுமல்ல இன்னும் பற்பல
எல்லாமே நடக்கிறது இங்கு சிட்னியில்

நம்தமிழ் முருகனுக்கு நல்லதோர் கோயிலமைக்க
நயமுடன் கலை நிகழ்ச்சியை நல்கிடும் சிறார்கள்
தம்மழலைத் தமிழில் தப்பின்றிப் பலசெய்து – இங்கு
தமிழினை வளர்க்க தளராது உழைக்கின்றனர்

பல்கலைக் கழகத்தில் பயின்றிடும் – தமிழ்
பற்றுடை வனிதையரும் வாலிபரும்
நல்லுணர்வு கொண்டு நயமுடன் தமிழ் வளர
நல்கிடும் பணிகளை நாமிங்கறிவோம்

இங்கே வளர்ந்து எம்மினிய தமிழைக் கற்று
இயல்பாக தமிழில் எம்முடன் வாதிட
இங்கிருக்கிறார்கள் எத்தனையோ இளையவர்கள்
இனியென்ன ஐயம் எம்தமிழ் வளருமா என

சிட்னியில் சிலகல்வி நிலையங்கள் எம்சிறார்கள்
சிறப்புடன் செந்தமிழைச் சீராய் கற்கவென
இட்டமுடன் எம்குழந்தைகள் இசையும் கலையும்
இனிதே கற்பதற்கு இங்குண்டு கலைக்கூடங்கள்

பட்டமும் பெறுகிறார்கள் பாங்குடன் பின்
பலர்முன் படைத்தும் காட்டுகிறார்கள்
திட்டமும் தீட்டி தீந்தமிழை இவரிங்கு
திடமுடன் நாடுவதில் தெரிவது தானென்ன

எம்தமிழ் இங்கு இளமைப் பொலிவுடன்
இலங்கிடும் என்பது இன்னுமா புரியவில்லை
நம்தமிழ் பாவலன் நாடியது கிட்டும்
நாளது வருவது திண்ணம்

நம்தமிழ் வாழும் நாளை அது தெரியும்
நாமொன்று செய்வோமிங்கு
எம்தமிழை வீட்டில் இன்பமாய்க் காப்போம்
இதுவே போதும் எம்தமிழ் சிறக்க

# இப்படியும் ஒரு நெறியாளர்?

இரயில் நிலையத்தை விட்டு நகரும் நேரம் நெருங்கிக்கொண்டே இருந்தது. தாத்தாவும் அத்தையும் வெளியே நின்றுகொண்டு இருந்தனர். மாமா என் அருகே அமர்ந்திருந்தார். விமானம் ஏறும் வரை அவராவது என்னுடன் இருபார் என மனம் ஒருவாறு திருப்தி அடைந்தது. மூன்று மாதங்கள் ஓடியதே தெரியவில்லை. சிங்கப்பூரில் என் அடுக்குமாடி வூட்டு கட்டடத்தின் முன் இன்னொரு வூடே கட்டி முடிந்தாகி விட்டதென அம்மா கடிதத்தில் எழுதியிருந்தாள். மூன்று மாதங்களுக்குள் அந்நாடு எவ்வளவு மாற்றம் கண்டிருக்குமோ என எண்ணிப்பார்த்தேன். என் மனக்கண்ணில் புத்தம்புதிய கட்டடம் தென்பட்டது. உடனே எனது தாய்நாட்டின் மண்வாசனை, என்னை ஈர்த்தது. தொழில்நுட்பத்தின் தாக்குதலால் கைத்தறிகள், மின்சார தறிகளுக்கு இடம் கொடுத்து விட்டன. மாட்டுவண்டிகளும் குதிரைவண்டிகளும் சென்றுகொண்டிருந்த வூதியில் வெளிநாட்டு வண்டிகள் ஓடுகின்றன. எங்கும் இயந்திர சத்தம், ஆனால் நான் பிறந்த வூடு, விளையாடிய வூதி, நூந்திய காவேரி ஆறு அனைத்தும் அவ்வாறே இருக்கின்றன. பக்கத்து வூட்டு பெண்பிள்ளைகள் திருமணமாகி புகுந்த வூடு சென்றுவிட்டனர். பாட்டிகளோ மெதுவாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தனர். இன்றும் அவர்களுக்கு எல்லாம் நான் 'கண்ணு' , 'அம்மணி' தான்.

அன்று தம்பியுடன் ஓடி விளையாடிய போது, தெருவில் சென்றுகொண்டிருந்த ஒரு பாட்டி, "அவந்தான் சின்ன பையன்னா, நூயும் ஏம்மா இப்படி விளையாடற?" என உரிமையுடன் அதட்டினாள். நானோ "போ பாட்டி" என சொல்லி விட்டு நகர்ந்து விட்டேன். யாரோ ஒரு பாட்டி என்னை இப்படி கேட்டுவிட்டாளே என்ற கோபம் ஒரு பக்கம் இருந்தபோதிலும், அவள் உரிமையுடன் வினாவை விடுத்த விதம் என் மனதின் ஒரு மூலையை நெகிழச்செய்தது. என்னை அறியாமலே சிரித்தேன். அந்த சிறு ஊரின் பற்பல கட்டுப்பாடுகள் என் இளம் மனதிற்கு சரிவரவில்லை. உடுத்தும் உடையிலிருந்து, நடக்கும் நடைவரை எண்ணிலடங்கா விதிமுறைகள் –ஒரு முறை மாமாவுடன் கடைத்தெருவுக்கு சென்றிருந்தபோது, வாய் விட்டு 'கொல்' என்று சிரித்ததற்காகவே மாமா சங்கடமடைந்தார். இந்நாட்டின் பெண்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற பேருரையே நடத்திவிட்டார். என் மனமோ எதையும் ஏற்கவில்லை. கூண்டில் சிக்கினாற் போல் தவித்தது. ஆணுக்கொரு நூதி பெண்ணுக்கொரு நூதி என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. பெண்களை வூட்டினுள் அடைத்து பாதுகாக்க எண்ணும் கணவர்களும், தந்தைமார்களும், சகோதரர்களும் என்னை வியப்பில் ஆழ்த்தினர். பேருந்துகளில், 'ரேக்ஷன்' கடையில், என பொது இடங்களில் ஆண்களையும் பெண்களையும் பிரிப்பது எனக்கு விசித்திரமாக இருந்தது.

"ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவிலோங்கி வையந் தழைக்குமாம் பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுரு போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம் நாணு மச்சமும் நாய்கட்டு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடி பெண்ணின் குணங்களாம் பெண்மை தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ! " என்ற பாரதியின் பாடல் என் ஞாபகத்திற்கு வந்தது. இவர் பிறந்த இம்மண்ணிலா இந்த கொடுமை என்றெண்ணி மனம் வருந்தியது. இது மட்டுமா, 1947ல் சுதந்திரம் பெற்றபோதும், யாதி மதம் என்ற எமன் மக்களை ஆட்டிபடைத்தான். இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆனாலும் இன்னிலை மாறுமோ என்ற சந்தேகம் எனக்கு. காந்தியை நினைத்துக்கொண்டேன். அமைதிப் போராட்டத்தில் ஆழ்ந்தேன். யாரோ என் கையைப் பற்ற திரும்பிப் பார்த்தேன். தாத்தாதான், வண்டி நகர ஒரு நிமிடமே இருந்தது. "கண்ணு, பத்திரமா போயிட்டு வாம்மா! நல்லா படி, அடிக்கடி லெட்டர் போடு, உடம்ப நல்லா பாத்துக்கோ என்ன ?" என தாத்தா கண்கலங்கச் சொன்னார். இது நாள் வரை அவர் கண்கலங்கி நான் பார்த்ததில்லை. அதற்கு முந்திய தினம் கொசுத் தொல்லை தாங்க முடியாததால் "நான் இந்த குப்பைக்கே இனிமே வரமாட்டேன்" என திட்டவட்டமாக கூறியதே இதற்கு காரணமாக இருக்கலாம் என்றெண்ணி என் மீது சினங்கொண்டேன். இரயில் நகர்ந்தது. "போயிட்டு வரேன்" என உதடுகள் ஒருவாரு அசைந்தன. தாத்தா முகமும் சிறிது மலர்ந்தது. ஒரு வேளை அது என் கற்பனையாகவே இருக்கலாம். மாமா என்னை பார்த்துக்கொண்டிருந்தார். நான் அழவில்லை. பழகிவிட்டது பிரிவல்ல அழுகையை அடக்கும் ஆற்றல் தான் பெருகிவிட்டது. இந்தக் கலையே பழகிவிட்டது. ஒருமுறையா, இரண்டு முறையா, எத்தனையோ பிரியாவிடைகள். ஒரே ஒரு மாற்றம் இம்முறை பாட்டி இல்லை, இருந்திருந்தால் பை நிறைய முறுக்கும், பலகாரமும் வைத்து திணித்திருப்பாள். இரயில் நிலையத்தில் அழுதே ஊரை கூட்டியிருப்பாள். நான் சொல்லிவிட்டு பிரிந்தேன். அவள் சொல்லாமல் போய்விட்டாள். சென்னையில் மாமாவிடம் இருந்து பிரிவு. பின்னர் மலேசியாவில் பெற்றோரிடமிருந்து பிரிவு. "சிட்னியிலோ என் மனம் விரும்பும் சுதந்திரம். ஓடினாலும், ஆடினாலும், சிரித்தாலும், அழுதாலும் கேட்பாரில்லை. வானமே எனக்கு எல்லை. இனி "கண்ணல்ல", "மணியல்ல" வெறும் லதா. ஏனோ தெரியவில்லை. அந்த பாட்டி திட்டியபோது நான் பெற்ற மகிழ்ச்சி இங்கு இல்லை. தாய்நாட்டின் கொசுக்களும், புளுதியும் எனக்கு ஞாபகமில்லை. ஆண் பெண் இடையே இருந்த சமத்துவமின்மையால் என் மனதினுள் எழுந்திருந்த போராட்டமும் மறைந்தோடிவிட்டது. தென்னந்தோப்பும், நெல்வயலும், நூலகிரியுமே மனக்கண்ணில் நிறைந்திருந்தன. அடுத்த விடுமுறை எப்பொழுது வரும் என்று அறிய அவா கொண்டேன். விழிகளும் கால அட்டையின் மீது பாய்ந்தன. வாரத்தின் இறுதி நாள். எல்லா மாணவர்களையும் போல, எங்களுக்கும் எல்லையில்லா மகிழ்ச்சி. வேலைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, படம் பார்க்க சென்றோம். நாங்கள் எழுவர். ஐந்து நாட்களாக காலேஜில் அடைந்துகிடந்தது, பேருந்தில் ஏறிய போது சுதந்திரம் பெற்றாற்போலிருந்தது. "சிண்ட்லர்ஸ்லிஸ்ட"(schindler's list)காணச்சென்றிருந்தோம். மூன்று மணிநேரப்படம். நன்றாக இல்லாவிட்டால் எப்படி அந்த நேரத்தை ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு கடத்துவது என்ற அச்சம் எங்கள் ஒவ்வொருவரின் மனதிலும் இருந்தது. ஆனால் படம் துவங்கியவுடன் நேரம்தான் எங்களை தள்ளுவதை உணர்ந்தோம். நாங்கள் எழுவர் சென்றது ஒரு கருத்தரங்கு நடத்தவே வழி வகுத்தது.

மூன்று மணி நேரத்தில் பல்வேறு கருத்துகள் எங்களை தாக்கின. இரண்டாம் உலகப்போரின் போது நடந்த அசம்பாவிதங்கள் அனைத்தும் எங்கள் நினைவிற்கு வந்தன. ஜெர்மனியர்கள் யூதர்களுக்கு கொடுமை செய்தாற்போல், ஜப்பானியர்களும், சீனர்களும், மற்ற ஆசிய

நாட்டு மக்களையும் சித்திரவதை செய்தனர். நாங்கள் அனைவரும் பெண்களாக இருந்ததாலோ என்னவோ, ஆனால் இவ்விரண்டு கொடுமைகளிலேயே ஒரு வேறுபாட்டை கண்டோம். ஜெர்மனிய அதிகாரிகள் ஆண் பெண் என்ற வேறுபாட்டைக் காணாது யூத மக்களை சுட்டுத்தள்ளினர். இந்த படத்தில் தோன்றும் அதிகாரி, யூதப்பெண்ணின் மீது விருப்பம் கொண்டபோதும், இதை வெளிப்படுத்த இயலாமல் அவளை அடித்தானே தவிர கற்பை பறிக்க முற்படவில்லை. ஜப்பானிய போர்வீரர்களோ, பெண்களை, உடலுறவு கருவிகளாகவே பயன்படுத்தினர். அண்மையில் போரின்போது, சூறழிக்கப்பட்ட பெண்கள் ஜப்பானியரிடம் நியாயம் கேட்பதை நம்மில் பலர் அறிந்திருக்கலாம். இந்த வேறுபாட்டிலிருந்து எங்களுக்குள் எழுந்த ஐயம் என்னவென்றால், ஜெர்மனியர்கள், யூதர்களை மனித இனத்தைச் சார்ந்தோர்களாக கருதாமையே இவர்களின் இப்போக்குக்கு காரணமா என்பதுதான், அப்படியென்றால், ஜப்பானியர்களின் போக்கு இதைவிட சிறந்ததா ?. இவ்விரு இனத்தாருமே மற்ற அனைத்து இனத்தாரையும் மக்களாகவே கருதவில்லை என்பதுதான் நிச்சயம். எங்கள் குழப்பத்தைத் தீர்க்க உங்கள் யாராவதால் முடியுமா? மேற்கண்டது வெறும் சிந்தனைக்குறிய கேள்வி. ஆனால், மற்றும் ஒரு எண்ணம் என்னுள் எழுந்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவத்தை இன்று, மக்கள் பழைய கொடூரங்களை மறந்து முன்னேற்ற பாதையில் செல்ல எண்ணும் இவ்வேளையில் இத்தகைய படம் எவ்வளவு தூரம் நமக்கு பயனளித்துள்ளது என்பது கருதப்படவேண்டிய ஒன்று. "ஸ்டீவன் ஸ்பைல்பேர்க்" கோடிக் கணக்கில் செலவு செய்து படம் எடுத்துள்ளார். மிக அற்புதமாகவும் அதை எடுத்து கலை உலகில் "ஒஸ்கர்" விருதையும் பெற்று தன் பெயரை நிலைநாட்டிவிட்டார். பல்லாயிரக்கணக்கான மக்களும் இப்படத்தைப் பார்த்து இரசித்து விட்டனர். மலேசியா, இப்படத்தைத் தனது நாட்டில் அனுமதிக்கவில்லை. இஸ்ரேலில் பாலஸ்தீனியர்கள் இருக்கும் இந்நிலையில், மதம் என்ற வேறுபாட்டினால், இவர்களும் யூதர்களை எதிரிகளாக கருதுவதே இத்தடைக்குக் காரணம் என்பதே பெரும்பாலோரின் கருத்து. இதனால் மலேசியாவை இகழ்வோர் பலர். காந்தி சொன்னார் – முடிந்ததை மாற்ற இயலாது அதனால், அதைவிட்டா, நாளை என்ன நடக்கும் என நம்மால் நிச்சயமாக சொல்ல முடியாது. ஆகவே, அதையும் கற்பனை செய்து மனதை கிளறாதே. இன்று என்ன நடக்கின்றது என்று பார். உன்னால், நீதிக்காக உழைக்க முடியுமா என்றெண்ணு. இதுவே, இறந்தகாலம் உனக்குக் கற்பித்த கல்வி, இதுவே சிறந்த எதிர்காலத்திற்கு வழி. இந்த சிறந்த கருத்தை மக்கள் உணர்ந்திருந்தால், யூத மக்களுக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நடந்த துன்பம் இந்த காலகட்டத்தில், இதே நேரத்தில், ஒவ்வொரு வினாடியும், ஆபிரிக்கா கண்டத்திலோ, பொஸ்னியாவிலோ நடக்கும் அசம்பாவிதங்களைத் தவிர்க்கலாமல்லவா ? என்னால் இவற்றை எண்ணி, என் கருத்தை பரிமாறத்தான் இயலுகின்றதே தவிர ஏதேனும் செய்ய இயலவில்லையே. வரலாறு பலவற்றை கற்பிக்கின்றது, சிலரே கருத்தை உணருகின்றனர். அந்தச் சிலரிலும் பலரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்னும் அரை நூற்றாண்டு கழிந்த பின்னர் "ஸ்டீநன் ஸ்பைல்பேர்க்" போன்ற கலை ஞானம் பெற்ற நம்முள் ஒருத்தன் "சின்வர்ஸ் லிஸ்ட" போன்று பொஸ்னிய மக்களின் துக்கக்கதையை அடிப்படையாகக் கொண்டு ஒரு படம் எடுப்பான். நாமும் நம் பேரப்பிள்ளைகளுடன் அதை பார்த்து, அதன் தத்துவங்களைப் பற்றி உரையாடி நம் வாழ்க்கை நம்மை அழைத்துச் செல்லும் திசையில் சென்றுகொண்டே இருப்போம்.

# அவுஸ்திரேலிய ஆதிக்குடிகளுடன் ஓர் அனுபவம்

டாக்டர் எஸ். தவசூலன்

அது ஒரு பசும் சோலை, முட்புதர்கள், அடர்த்தியான காடுகள், இவை மத்தியிலே ஒரு சிறு நகரம். கதிரவனின் உச்சி கொழுத்தும் வெய்யில், இவை யாவும் நிறைந்த நிலப்பரப்பைச் சூழ அலைபாயும் கடல், அது ஒரு குடாநாடு, இவையெல்லாம் யாழ்ப்பாணத்தைப்பற்றித்தான் வர்ணிக்கப்படுகின்றதோ என ஓர் சந்தேகம். இல்லை இது நாகரூக, இயந்திரயுக முன்னேற்றத்தில் மிகவும் மந்தமாகவுள்ள அவுஸ்திரேலிய நாட்டின் வட உச்சியிலே அமைந்துள்ள ஆதிக்குடிகள் வாழும் arnhem land என அழைக்கப்படும் aboriginals நில உரிமைச் சட்டத்தின்கூழ் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் தலைநகரேயாகும். இக்குடாநாடு nhulunbuy என அவர்களின் மொழியால் அழைக்கப்படுகின்ற போதிலும் அதன் ஆங்கிலப்பெயராகிய gove peninsula என்பதே பிரபல்யமானது. கடந்த வருடம் ஓர் பயிற்சிக்காலத்தின் ஒரு பகுதியை இப்பிரதேசத்தில் இரு வார காலம் கழிக்க எனக்கோர் சந்தர்ப்பம் கிடைத்தது. நகரத்தில் இருந்து சென்று இப்பிரதேசத்தில் வாழ்வதில் சில சிரமங்கள் இருந்த போதிலும் aboriginal மக்களுடன் நெருங்கிப்பழக ஒரு வாய்ப்பு ஏற்பட்டமை ஒரு புதுமையான, சிந்திக்கவைக்கும் நாட்களாக அக்குறுகிய காலம் அமைந்தது ஆதிக்குடிகள் பற்றி பல மாறுபட்ட கருத்துக்கள் அவுஸ்ரேலிய நகர மக்களிடையே நிலவுகின்ற போதிலும் அவர்களிடம் பொதுவாக பல நல்ல குணங்களை நான் காணக்கூடியதாக இருந்தது. அன்புடன் பழகும் குணாதிசயம், கலாச்சாரத்தை கட்டுப்பாட்டுடன் பேணுதல் என்பன அவர்களிடம் ஊறிக்கிடந்தன. ஆயினும் இன்றைய அணு காலத்திலே ஏதோ காரணங்களினால் இவர்களினது வாழ்க்கை மட்டும் மந்த முன்னேற்றமாகவே இருப்பது கவலைக்குரிய விடயம்தான். பல விடயங்களில் அவர்களின் அறியாமை, அக்கறையின்மை போன்றவை அவர்களின் முன்னேற்றத்திற்கு தடைக்கான காரணங்களில் சிலவாக இருக்கக்கூடும். gove நகரத்தின் பொருளாதார மையத்தையும் அதன் அருகே அமைந்துள்ள ஒரு அலுமினிய அகழ்வுசாலையையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இவ்வாதிக்குடிகளிடம் இருந்து குத்தகைக்கு வாங்கியுள்ளது, இதன் பிரகாரம் இம்மையத்தில் ஏறக்குறைய 400 அவுஸ்ரேலியர்கள் (ஆதிக்குடிகள்தவிர்ந்த) வாழ்ந்துகொண்டு வணிக, பொருளாதார, மருத்துவ துறைகளில்ஈடுபட்டுள்ளார்கள். இதனைத்

தவிர்ந்த மற்றய பிரதேசங்களினுள் செல்வதற்கு விசேட அனுமதியை ஆதிக்குடிகள் நிலச்சங்கத்திடமிருந்து (aboriginal land council) பெறுதல் வேண்டும். gove நகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தை தவிர்ந்த மற்றய இடங்களில் நவீன தார் வீதிகள் அமைக்கப்படவில்லை. ஆயினும் 4wd செல்லக்கூடிய ஒற்றையடிப்பாதைகள் உண்டு. arnhem land எனப்படும் இந்த முழு நிலப்பரப்பும் victoria state ஐ விட இருமடங்கு பெரியது. இந்த பெரிய பிரதேசத்திலே மக்கள் சிறு சனத்தொகைகளாக நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாற்பட்ட கிராமங்களில் வசிக்கிறார்கள். இக்காரணங்களினால் மக்களுக்கு வேறுபட்ட வாழ்க்கை வசதிகள்பெற்றுக்கொடுப்பது கடினமான விடயமாகவே இருந்து வருகிறது. கல்வியைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு சிறு கிராமத்திலும் ஓரிரு பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன ஆயினும் உயர் வகுப்புக்கள் உள்ள பாடசாலைகள் மிக அரிதாகவே உள்ளன. இதற்கு பலர் பள்ளிப்படிப்பை ஆரம்பத்திலேயே நிறுத்திவிடுவதும், ஆசிரியர் பற்றாக்குறையுமே காரணமாகும். மருத்துவ வசதி இப்பகுதியில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. arnhem land முழுவதற்கும் 80 படுக்கைகளைக் கொண்ட ஒருவைத்தியசாலை மட்டும் gove நகரத்தில் அமைந்துள்ளது, மற்றைய சிறு கிராமங்களில் மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் ஒன்று அல்லது இரண்டு தாதிமார்கள் நிரந்தரமாக பணிபுரிகிறார்கள், இவர்கள் வழமையாக வைத்தியர்கள் போல் செயற்பட்டு நோய்களுக்கு நிவாரணமளிக்கின்றார்கள். gove வைத்தியசாலையில் கடமையாற்றும் நான்கு வைத்தியர்களும் நாள்தோறும் வேறுபட்ட கிராமங்களுக்கு சிறு விமானமூலம் சென்று clinic ஐ நடாத்தி வருகிறார்கள். இதன்படி ஒரு கிராமவாசிக்கு ஒரு வாரத்தில் ஒருநாள் வைத்தியரின் தரிசனம் கிடைக்கும். இதனைத்தவிர அவசரமான நோயாளிகளைக் கொண்டுவரவும் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன, உதாரணமாக எனது பயிற்சிக்காலத்தில் ஒரு பெண்ணின் மகப்பேற்றிற்கு வைத்தியசாலையில் அனுமதி-
-ப்பதற்காக 600 km இற்கு அப்பாற்பட்ட கிராமத்திலிருந்து அப்பெண்ணை விமானமூலம் கொண்டுவந்தோம். இவ்வாறாக பல கிராமங்களுக்கு விஜயம் செய்து அம்மக்களுடன் பேசிப்பழகி அவர்களின் வாழ்கை முறைகளையும், பிரச்சினைகளையும், குறிப்பாக மருத்துவசம்பந்தப்பட்டவைகளையும் அறிய எனக்கு சந்தர்ப்பம் கிட்டியது. மருத்துவசம்பந்தப்பட்டவகையில் இம்மக்களுக்கு மற்றய அவுஸ்ரேலிய மக்களிடம் இல்லாத பல நோய்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது, குறிப்பாக பல தொற்றுநோய்கள், கசம், தொழுநோய், சருமவியாதிகளுடன் இளம் வயதில் இருதயநோய் சலரோகம் என்பன ஏராளமாக காணப்பட்டன, இவற்றைத்தவிர இவர்களிடம் மதுஅருந்துதலும், போதைமருந்து உட்கொள்ளலும், பெற்றோல் சுவாசிப்பதும் பொதுப்படையாக காணப்பட்டன. இவ்வியாதிகளினால் அங்கு இறப்புவீதம் கூடுதலாகஉள்ளது. இங்குள்ள ஆதிக்குடிகள் 70 இற்கு மேற்பட்ட மொழிகளை பேசுகிறார்கள், ஏறத்தாள 50% மக்கள் ஓரளவு ஆங்கில அறிவுள்ளவர்களாக காணப்பட்டாலும் அவர்களுடன் உரையாடுதல் சற்று சிரமமாகவே இருக்கிறது. இதற்கு மொழிப்பிரச்சினை மட்டுமல்ல அவர்களது நாணமும் காரணமாகும், இவர்களது கிராமங்களில் சில

பெட்டிக் கடைகளை காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் சாதாரணமாக கிழங்கு வகைகளையும், மாமிச வகைகளையுமே விரும்பி உண்ணுகிறார்கள். அரசாங்கத்தால் பல வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் வீட்டிற்குவெளியே மண்தரையிலே உறங்குவதையே விரும்புகிறார்கள், கிராமங்களில் அவர்களது வீடுகளில் நவீன வெகுசன சாதனங்களோ, வாகனங்களோ இருப்பதில்லை, இவ்வாறாக இம்மக்கள் உலகின் மற்றய பாகங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு தனி வாழ்க்கை அமைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி......

# தமிழும் தமிழரும் -

மருத்துவம், பொறியியல், கணணியியல், வேளாண்மையியல் போன்ற பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற்ற அறிஞர்கள் தாம் கற்ற கலைகளை நம் தாய்மொழிக்குத் தர வேண்டும். அப்போதுதான், தமிழின் தனிச் சிறப்பு குன்றா வண்ணம் நம் மொழியை நாம் காக்க முடியும். ஒரு மருத்துவரை, பொறியாளரை, கணணியியல் மேதையை விஞ்ஞானியை தமிழ்மொழி, ஆங்கிலத்தின் உதவியின்று உருவாக்கும் போதுதான் அதன் தனித்தன்மை நிலைத்து நிற்கும்.

அதற்கான செயலில் நாம் ஈடுபட –பாரதியாரின் சொற்களில் சொன்னால் – இன்றே நல்ல நாள், இதுவே நல்ல நேரம்.

# மறந்தா போனாய்?

–பீலிக்ஸ் செபஸ்டியன்புள்ளே –

(நன்றி – இலங்கை வானொலி)

காதலை உளத்தில் தேக்கிக்
களிப்பினை உதட்டில் காட்டி
ஆதவன் உதயம் போன்ற
அழகிய முகத்தால் என்னை
வேதனைப் படுத்தி விட்டு
விழி எனும் வேலால்குத்திச்
சோதனை செய்ததெல்லாம்
சுந்தரி நீ மறந்தாபோனாய்?

நிலவொளி தென்றல், காற்று
நீர்நிலை தன்னில் பூத்த
மலர்களின் சிரிப்புப் புங்கா
மணல்வெளின் சிரிப்புப் பூங்கா.
சல, சல வென்ற நாளும்
சப்த்தமிட்டு ஓடும் ஓடைக்
களிப்பினை நமக்கிங் ஈந்த
காட்சியை மறந்தா போனாய் ?

சொல்லிலே குழைவைக் கூட்டி
வெல்லமாய் சுவைக்கப் பேசி
அல்லலை எனை விட்டோட்ட
அமிழ் தெனும் தமிழில் பாடி
மெல்லுடல் தனை யெந்தன்
மேனியோடிணைத்து வைத்து
நற்கதைப் பேசிச் சென்ற
நாட்களை மறந்தா போனாய்?

# ரகசிய ரணங்கள்



அருண் விஜயராணி

**"அக்கா- இதுதான் நான் எழுதுற கடைசிக் கடிதம். இனிமேல் ஸ்பொன்ஸர் லெட்டருக்காகக் கெஞ்சமாட்டன். உன்னுடைய உறவும் இதோட சரி".**

**சாரதா அவளுக்கு எதிரில் நின்று பேசுவது போலிருந்தது வீணாவுக்கு. அவள் எப்பவுமே அப்படித்தான். படபடப்பும்... துடிதுடிப்பும் இயற்கையாகவே அவளுக்கு அமைந்துவிட்டது. அந்த அந்த நிமிஷங்களுக்காக வாழ்பவள். எதிர்காலத்தை.. சிந்தித்து- சிந்தித்து நிகழ்காலத்தை வீணடிக்காத புத்திசாலி...**

கடிதத்தை மடிக்கக்கூடத் தோன்றாமல் அப்படியே அதனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் வீணா. குண்டு மல்லிகைகளைச் சேர்த்துக் கொட்டிவிட்டதைப் போன்ற கையெழுத்து..... கண்ணில் எடுத்து ஒற்றிக்கொள்ளலாம் போன்று. கையெழுத்து மட்டுமல்ல... அவள் கூட அத்தனை அழகுதான். இளைஞர்களை அலைக்கழிக்கும் அழகு. வீட்டுக்கு வந்துவிட்டுப் போகும் எந்த இளைஞனும் phone பண்ணி I love you என உளறவைக்கும் அழகு......

"சாரு..... யார்... phone இல?" "வேறு யார்... உங்களுடைய friend எண்டு கூட்டிக்கொண்டு வந்தீங்களே..... அவவின்ர மகன்தான். என்னைக் கண்டதில இருந்து நித்திரை வரேல்லையாம். ஏன்தான் இப்படித் தமிழ்ப் படங்களைப் பார்த்திட்டு உளறிக்.......காசை வீணாக்குதுகளோ தெரியாது".

அம்மாவின் முகம் அவமானத்தில் சிவக்க... அப்பா.... விழுந்து விழுந்து சிரிப்பார். டப்பென்று பதில் சொல்வதும்... தான் நினைத்தது உடனே தனக்குக்கிடைக்கவேண்டுமென்று நினைப்பதும்...... எவ்வளவு கலகலப்பும்...குறும்பும் நிறைந்தவள்..... உனக்கேனடி... அவுஸ்ரேலியா ஆசை வந்தது!

வீணாவின் கன்னத்தில் கண்ணீர்

முத்துக்கள் பொல பொலவென உருண்டோடின.
விக்கி விக்கி அழவேண்டும். அழுது.. அழுது.. நெஞ்சில் உள்ள கவலையை எல்லாம் இறக்கி வைத்துவிட வேண்டுமென்ற ஆவேசம்.... மனதில் துயரம் முட்டி.. முட்டி வெடித்து விடுவேன்... வெடித்து விடுவேன் என இதயம் பயம் காட்டும்போது ஒப்பசிற்கு லூவு போட்டு விட்டு.. அழுது.. அழுது கரைந்து... அதில் சோகங்களைக் கரைப்பது இப்பொழுதெல்லாம் அவளுடைய வேலைகளில் ஒன்றாகப் போய்விட்டது. பிள்ளைகள் இல்லாமல் தனிய இருந்து அழ... இதுபோன்ற சந்தர்ப்பங்களை... அவளாகவே இப்போ அடிக்கடி உருவாக்க ஆரம்பித்துவிட்டாள்.
சாருவின் கடிதம் வந்து ஒரு கிழமையாகிவிட்டது. இன்னும் பதில் எழுதவில்லை. கட்டாயம் இண்டைக்கு முடிவு எடுத்துப்போடவேணும்......

“வ்வாக்...... வ்வாக்.......” பிரதீப்தான் சத்தி எடுக்கிறான்.
விழுந்தடித்துக்கொண்டு பாத்ரூமிற்குள் ஓடினாள் ஷாணா.
நேற்றுக் குடித்த அத்தனை ‘விஸ்கியும்’ நாற்றத்துடன் வெளியேறிக் கொண்டிருக்க... நிற்கமுடியாமல் தள்ளாடிக்கொண்டு.......
டவலை நனைத்து இதமாக முகம் முழுவதையும் இலேசான சுடுதண்ணியினால் துடைத்துவிட்டவள்... கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு வந்து டி.வி ரூமிற்குள் இருத்தினாள்.
சூடான கோப்பியை அவன் முன்னால் நீட்டிய பொழுதுதான்.. பிரதீப் சுயநினைவிற்கு வந்தான்.
“ஒவ்வீஸிற்குப் போகேல்லயோ... ஷாணா” “இல்லை” “ஏன் ?”
ஷாணாவுக்குப் பதில் சொல்ல முடியாமல் கண்கள் கலங்கின. அவன் அருகே அமர்ந்து மார்பின் மீது தலையைச் சாய்த்துக்கொண்டாள்.
அவன் எதுவுமே பேசவில்லை.
அவனது குடியும்... அவளது அழுகையும் இப்போ கடிகாரத்தின் இரண்டு முட்கள்போல் ஒன்றையொன்று துரத்த ஆரம்பித்துவிட்டன.
“பிரதீப் என்ன சாப்பாடு செய்ய?”
“எனக்குப் பசிக்கேல்ல”
“சொல்லுங்கோ.. உங்களுக்கு விருப்பமான றொட்டியும் மாஸ் சம்பலும்.....”
உங்களுக்குக் கஷ்டம். எனக்குச் ஸாண்ட்விச் போதும்... நான் படுக்கப் போறன்.. ஷாணா.. தலையிடிக்குது”.
“வேண்டாம்.. பிரதீப்... என்னோட கதையுங்கோ. இப்ப எல்லாம்... நீங்கள் கதைக்கிறதேயில்லை பிரதீப்.
அவள் கெஞ்சிக்கொண்டு அவனது கையைப் பிடித்து இழுக்கவும்... அவன் சட்டை செய்யாமல் அறையை நோக்கி நடந்தான்.
அவளுடைய கண்ணீரும்... கெஞ்சலும் கூட.. இப்போ... சாதாரணமாகி.......
அவன் பின்னே சென்றவள்.. அறையின் சாராய நெடி தாங்காமல்.. airfreshner அடித்தாள். ஜன்னல் கேட்டினை விலக்கிய பொழுது சூரிய ஒளி பாய்ந்து அறையின் இருட்டுப் பளீரென நகர்ந்தது.
கடவுளே.. பளீரென இருந்த என்னுடைய வாழ்க்கையை நானே இருட்டாக்கிக்கொண்டுவிட்டேனா?”.
றொட்டிக்கு மாவைப் பிசைந்த போதும்.. உருட்டிய பொழுதும்.. நெஞ்சில் நினைவுகள் மோதி மோதி வலித்தது.
றொட்டிக்கு மாவைப் பிசையும் பொழுது ஒருத்தர் மீது ஒருத்தர் முகத்தில்

மாவை அப்பி... சூண்டி.. விளையாடிக்... கோபித்து!....
எவ்வளவு சந்தோசமான வாழ்க்கை கொழும்பில்....
மடிப்புக் கலையாத உடுப்போடு.... டிரைவர் கார் ஓட்ட... பிரதூப் ஒவ்வூசிற்குப் போய்வந்த அழுகு.. அவனுடைய திறமையும்... உழைத்த உழைப்பும்....
எதில் குறை வைத்தான் பிரதிப்? அவளைக் கொஞ்சுவதிலா... அவளுக்குத் தேவையானதை வாங்கித் தருவதிலா... அவளுக்குச் சின்னக் காய்ச்சல் என்றால் கூட.... அவளுடன் ஒட்டிக்கொண்டு... வூணா.. வூணா.. என்று முத்தமிடுவானே. அவளுடைய எந்த ஆசையை அவன் நிறைவேற்றவில்லை.......
யோசிக்க யோசிக்க மூளையெல்லாம் வலித்தது.
foreign க்குப் போகவேண்டுமென்ற ஆசை எப்படி என் மனதில் வந்தது.
"வூணா.. இது என்னுடைய sister London இல் இருந்து அனுப்பின saree இதுதான் இப்ப latest ஆம்....."
"வூணா.. என்னுடைய Brother... family யுடன்; next week... Americaவில் இருந்து வாறார். பார்ட்டி ஒன்று organise பண்ணுறான்... கட்டாயம் வாரும்.....
ரூபா... அழைக்கும் பொழுது... தன்கென்று ஒருவரும் வெளிநாட்டில் இல்லையே என்று மனம் அங்கலாய்க்கும். அவர்களைப் போய்ப் பார்க்கும் பொழுது... அவர்கள் வெளிநாட்டுப் பெருமையினை.. கதை கதையாக அளக்கும்போதும்... வெளிநாட்டில் வாழ்பர்கள் எல்லாம் அதிர்ஸ்டசாலிகளாக.. வெளிநாட்டுக்குச் செல்ல முடிவதே.. பெரிய ஒரு தகுதியாக...... வூணாவின் மனம் ஏக்கப் பெருமூச்சு விடும்.
காசை எறிந்து தனக்குப் பிடித்தமான எதையும் வாங்க முடிந்தாலும்... அதுவே வெளிநாட்டிலிருந்து யாரும் அனுப்புவது போன்று வருமா?...
மெல்ல மெல்லமாக... வூணாவின் மனதில் துளிர்விட்ட ஆசை.. இப்போ... வளர்ந்து.. பெரிய மரமாக... forein இற்குப் போகாவிட்டால் வாழ்க்கையே இல்லை என்றதுபோல்.....
"பிரதூப் நாங்கள் அவுஸ்ரேலியாவிற்குப் போனால் என்ன?"
"வூணாவுக்கு.. ஏன் இந்தத் திடீர் ஆசை? இங்கை என்ன குறை?"
"எனக்கென்னவோ...
ஒரு changeஇற்கு வெளிநாட்டில போய் இருக்கவேண்டும் போல இருக்கு. என்னுடைய friends கனபேர் போட்டினம் பிரதூப்..... அங்கபோய் நல்லாய் உழைத்து.... வசதியாக இருக்கினமாம்".
"அதில என்ன பிழை வூணா... நாங்கள் இங்கை எவ்வளவு வசதியாக இருக்கிறம். வெளிநாட்டுக்குப் போய் உழைத்துத்தான் சம்பாதிக்க வேண்டுமென்றில்லை. இங்கை உழைக்க முடியாதவை.. அங்கை போய் உழைத்து நல்லாக வரட்டுமன். வெளிநாட்டுக்குப் போன எத்தினபேர் கஸ்டப்படுகினம் என்றும் நான் கேள்விப்பட்டனான்".
"அதெல்லாம் படிக்காத ஆட்கள்தான் கஸ்டப்படுவினம்.... நுங்கள் ஒரு Ph.D. இங்கயே உங்களுக்கு எவ்வளவு பெயர்? அவுஸ்ரேலியாவுக்குப் போன உடன வேலை கிடைக்கும். இங்கைமாதிரி servants உம்... driverஉம் இல்லை. எங்களுடைய மகன் இங்கை Private school இல் படிக்கிறான். அங்கே Government school தான்".
அவுஸ்ரேலியாவில் உள்ள Governmnt school இலங்கையிலுள்ள Private school

ற்குச் சமன். காந்தி சொன்னவள். இப்படியே இந்தப் பிரச்சினைக்குப் பயந்துகொண்டிருக்காமல் ..... அவுஸ்ரேலியாவுக்கு migrate பண்ணுவம்".

கொஞ்சிக் கொஞ்சி வுணா கெஞ்சியபொழுது பிரதுப் சம்மதித்துவிட்டான்.

ஆனால் அவள் பிரதுப்பின் அப்பாவிடம் கேட்டபோது அவர் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"You are making the wrong decision மகள்"

"இல்லை மாமா... இந்தப் பிரச்சினைக்குப் பயந்துகொண்டிருக்காமல் நாங்கள் போகப் போறம்".

"பிரச்சனை எண்டைக்கும் உங்களைப் பாதிக்காது. உடனே டிக்கட் புக்பண்ணி.. சிங்கப்பூருக்கோ இந்தியாவுக்கோ உங்களை அனுப்பிப்போடுவன்".

"வுட்டை விட்டு Airport வர போறமட்டும் நாங்கள் உயிரோடு இருந்தால்தானே மாமா" அவர் வுணாவிடம் தோற்றுப்போய்விட்டார். அவள் முடிவெடுத்துவிட்டது அவருக்கு நன்றாகப் புரிந்தது".

"வுணா.. Business விடயமாக நான் வெளிநாடுகளுக்குப் போய் வந்த நான். நு நினைப்பதுபோல் வெளிநாடு சொர்க்க பூமி வசதியில்லாதவர்களுக்குத்தான். உங்களுக்கு அல்ல. பிரதுப்பை எனக்குத் தெரியும். அவனுக்கு ஞாயமான superiority complex. யாருக்கும் பணியமாட்டான். அவனைவிட நான் மற்றப் பிள்ளைகளைப் புகழ்வதையே தாங்கமாட்டாதவன். அப்படிப்பட்டவனை அவுஸ்ரேலியாவுக்குக் கூட்டிப்போக நினைக்கிறாய்.

கவனமாக பார்த்துக்கொள்"

அவர் தழுதழுத்துச்சொன்னபோது ...அவள் பிரதுப்பின்மேல் உள்ள அளவுகடந்த அன்பில்தான் அப்படிச் சொல்கிறார் என நினைத்தாள்.

ஆனால் அவர் எவ்வளவுதூரம் பிரதுப்பை புரிந்து வைத்திருக்கிறார் என்பது அவுஸ்ரேலியாவிற்கு வந்த பின்புதான் வுணாவிற்குப் புரிந்தது.

ஆரம்பத்தில் அவுஸ்ரேலியா வாழ்க்கை

எவ்வளவு இனிமை........

பிரதுப்புக்கு வேலைகூட உடனே கிடைத்துவிட்டது. "How can he boss me around....... என்னுடைய குவாலிபிகேசனில கால்வாசி கூட இல்ல

என்ன டிக்டேட் பண்ணிக்கொண்டு" முணுமுணுக்கஆரம்பித்தவன் ஒருநாள் வேலையை தூக்கி எறிந்துபோட்டு வந்துநின்றான்.

அடுத்தடுத்த வேலைகளும் அதேபோல, எந்தவேலைக்கு சென்றாலும் அவனால் நிலைத்து நிற்க முடியவில்லை, தனக்குக் கீழ் பல பேரை அதிகாரம் செய்து வேலைவாங்கிய மனது இங்கே அடிபணிய மறுத்தது, தான் இருப்பது கொழும்பல்ல அவுஸ்ரேலியா என்றுகூட நினைக்க

மறுத்தது .

"வெள்ளைக்காரன்கள் எண்டால் கொஞ்சம் இப்பிடித்தானாம்".

"அவன்ரதோல் வெள்ளையெண்டால் எனக்கென்ன, முதல்ல மூளைக்குள்ள விசயத்த தெரிஞ்சுவைச்சுக்கொண்டு பிறகு என்ன பொஸ்பண்ண சொல்லு" பிரதுப்பிற்குள் உள்ள superiority complex சை அன்றுதான் முதன்முதலில் வுணா கண்டாள்.

வேலையில்லாமல் குடும்பம் டோலில் ஓடியது, அவனுடைய ஆரம்ப

வேலையைக்கொண்டு லோன் எடுத்து வாங்கிய வீடு மோட்கேட்ச் கட்டமுடியாமல்...... விற்றுவிட்டு வாடகை வீட்டுக்கு போகவும் தன்மானம் இடம் கொடுக்காமல்....... பிள்ளைகளின் சிணுங்கல் அதிகமாக..... வாழ்க்கையின் தரம் குறைய ஆரம்பிக்க....... பிரதீப் கவலை தாங்க முடியாமல் குடிக்க ஆரம்பித்தான்.

"திரும்ப கொழும்புக்கே போய்விடலாமா பிரதீப்". "நோ அப்பா என்ன சொல்லுவார், பிரெண்ட்ஸ் எப்பிடிச் சிரிப்பாங்கள், வந்த உடன அவுஸ்ரேலியாவைப் பற்றி புழுகி எழுதிப்போட்டு , இனி பிள்ளைகளும் இங்கிலீஸ் மீடியத்தில படிக்கத்துவங்கிவிட்டார்கள்".

வீணா இடிந்துபோய்விட்டாள் குடும்பத்தில் கஸ்டம் நாளுக்குநாள் மோசமாக.......என்னுடைய அப்பாவிற்கு எழுதி .... காசு எடுக்கலாமா....... ரூபாய்களை டொலர்களாக மாற்றி........எத்தினை நாட்களுக்கு இந்த வாழ்க்கை இப்பிடியே........

ஏனம்மா அப்பா வீட்டிலேயே இருக்கிறார்? வேலைகிடைக்கும் வரை..... ஏதாவது பக்ரறியில வேக் பண்ணுறதுதானே ?

பதினைந்து வயது மகன் கேட்ட ரோசத்தில பிரதீப் வேலைக்குப் போகவில்லை. அவள்தான்படித்த படிப்பையும் ஒதுக்கிவிட்டு பக்ரறியில் வேலைசெய்ய ஆரம்பித்தாள்.எல்லாமாக கூடி இரண்டுமாதங்கள்தான். பிரதீப்புடன் படித்தவன் கண்டு தன் பிள்ளையின் பேர்த்டே பாட்டிக்கு கூப்பிட்டான், டின்னர் முடிந்து ஆட்டமும் பாட்டமும் தொடங்கின, பிரதீப்பும் வீணாவும் வெள்ளனவே வெளிக்கிட்டு பிறெண்ஸ்சிடம் சொல்லிக்கொள்ள கிச்சினுக்குள் நுழைந்தார்கள்.......

"பெரிய பணக்காரன்.. பி எச் டி எண்டீங்கள், அவருக்கு வேலயில்லயாம் அவா பக்ரறில வேக் பண்ணுறாவாம், இவையள் எல்லாரையும் கூப்பிட்டு ஏன் என்ர மானத்தை வாங்குறீங்கள்"

"இல்ல மீரா.... அவன் சிலோனில பி எச் டி தான்"

"ஒஸ்ரேலியாவில என்னவா இருக்கிறேர் எண்டு கேட்டனீங்களே"

சொல்லிக் கொள்ள வந்தவர்கள் சொல்லிக்கொள்ளாமலே வீடு திரும்பினார்கள்.

"திஸ் இஸ் றபிஸ்.... கவ் கான் தே றெஸ்ப்பெக்ட் பியுப்பிள் பை தேயர் வேக் அண்ட் வெல்த்"

அன்று சத்தம் போட்டுக் கத்தியவன் தான் அதன் பின் சத்தமே இல்லாமல் போய்விட்டான்.

வேலைக்குப் போவதில்லை.........
பிறெண்ஸ்சிடம் போவதில்லை.......
யாருடனும் கதைப்பதில்லை........
சிரிப்பதில்லை.......

சரியாக சாப்பிடுவதுகூட இல்லை..... விடிய ஆரம்பிக்கும் குடி...... இரவுவரை நீண்டு .,....மயக்கமும் ....விழிப்புமாக.......அவனை ஆறுதல் படுத்த வீணாவால் முடியவில்லை, திருத்தவும் முடியவில்லை.

வீட்டு மோட்கேட்ச் .....பிள்ளைகளின் பள்ளிக்கூட செலவு.....சாப்பாடு எல்லாமே ஒரு பக்ரறி சம்பழத்திற்குள் அடங்கிவிடுமா?

அவள் பப்பிளிக் எக்சாம் எடுத்து பாஸ்பண்ணி வேலைக்கு போகத்தொடங்கினாள்.

" I don't know ....how.... you sleep next to him ....... he smells"

மகள் ராது .....மூக்கைப்பிடித்து அபிநயம் காட்டிச்சிரிப்பாள்.

"மை பிறெண்ஸ் டாட் கூ வேக்ட் ஆஸ் எ டொக்டர் இன் சைனா இஸ் வேக்கிங் ஆஸ் எ ரக்சி றைவர் கியர். ஐ டோன்ட் நோ வை கூ இஸ்

கூ டசின்ற் ரேக் யூ எனிவெயா....
கூ டசின்ற் டு எனிதிங்......
வை இஸ்ரில் யூ நூட் கிம் அம்மா
வை டோன்ற் யூ டிவோஸ் கிம் ?
பிள்ளைகள் ஆத்திரத்துடன் கத்தும் பொழுது .......
ஐ ஸ்ரில் லவ் கிம்..... ஐ ஸ்ரில் லவ் கிம் ....
அவள் விம்மிக்கொண்டே கூறுவாள். அம்மாவின் அழுகை பிள்ளைகளுக்கு வியப்பாக இருக்கும், இப்படியும் ஒரு அம்மாவா என முகத்தை கேள்விக்குறியாக்கும்
பிரதுப் அவள் மேல் வைத்த ஆசையை அன்பை அவளால அவர்களுக்கு விளங்கப்படுத்த முடியாது. வேலையும் வூடும் மட்டும் வாழ்க்கையாக போய்விட்ட பின்பும்கூட.........
அவன் குடித்தால் கூட உயிரோடு தன்அருகே இருக்கின்றான் என்ற சின்னச் சந்தோசத்தில் தான் அவள் இயங்கிக் கொண்டிருக்கிறாள் என்பது அவர்களுக்குப் புரியுமா ?
அவர்களுக்கு மட்டுமென்ன, அவளுடைய அம்மா அப்பா காரர்களுக்கு கூட தெரியாது அறிந்தால் எப்படி துடிதுடித்துப்போவார்கள், அதனால்தானே சாருவும் அவுஸ்ரேலியா வர துடிக்கிறாள், அவளுடைய ஸ்பொன்சர் லெற்ரரினால் கிடைக்கும் பொயின்ஸ் சிற்காக
ஏங்கிக் கொண்டு...... இஞ்சினியறிங் இரண்டாம் வருடத்தில் இருந்தவள் ஒரே நாளில் படிப்பைத் தூக்கி எறிந்துவிட்டு வந்துநின்றாள்.......
"அப்பா இனிமேல் நான் படிக்கேல்ல "
"ஏனம்மா ?"
"நான் ஜெனனை மரி பண்ணப்போறன் "
"கல்யாணத்திற்கும் நூ படிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்"
"நான் லவ் பண்ணுற ஜெனன் ..... அவ்வளவு படிக்கேல்ல கொமர்சியல் பாங்கில் கசியரா வேக் பண்ணுகிறார்"
"சாரு!"
"அப்பா ...நூங்கள் எவ்வளவு கத்தினாலும் உங்களுடைய விருப்பத்தோடதான் நான் ஜெனனைக் கல்யாணம் செய்வன் "
அப்பா எவ்வளவு கெஞ்சியும் சாரு மேலேபடிக்க மறுத்துவிட்டாள்.
அப்பாவிற்கு ஒன்றுமே செய்ய முடியவில்லை மூத்த மருமகன் ஒரு பி எச்.டி, இரண்டாவது மருமகன் ஒரு கசியர். பேசாமல் தன்னுடைய கொம்பனியில் அவனை மனேஜராக்கிவிட்டு வெடிங் இன்விட்டேசன் அடித்தார்.
வெடிங் றிசெப்சனில் சாருவும் ஜெனனும் கை கோர்த்து நடந்த போது ஊர்க்கண்ணே பட்டுவிடும் போலிருந்தது.
"எனக்காக தன் படிப்பையே தூக்கி எறிந்தவளாக்கும் "
ஜெனனின் முகத்தில்தான் எவ்வளவு கர்வம் வசதியான வாழ்கையில் அவர்கள் அடித்த கும்மாளங்களும் கொண்டாட்டங்களும்.
இந்த சிரிப்பும் சொகுசான வாழ்க்கையும் இங்குகிடைக்காமல் போய்விட்டால்........
பி எச் டி என்ற பட்டத்திற்குரியவனே இன்று ஏமாற்றம் தாங்காமல் குடிகாரனாகிவிட்டான் அப்படியிருக்கும் பொழுது சாதாரண ஜெனன் .......
அப்பாவைப்போல ...... கொம்பனி மனேஜராக அவனைத்தூக்கிப்போட இங்கு யார் இருக்கிறார்கள்
அவனைப்போல ஜெனன் இடத்திற்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டாலும், பிரதுப்பைப் போலவே சாருவும் ...... குணத்தில் நினைத்ததெல்லாம் தனக்கு கிடைக்க

# கண்டதும் கேட்டதும்

## அவுஸ்திரேலிய தமிழ் தாபனம் வழங்கிய முத்தமிழ் மாலை

சிட்னி மாநகரில் தமிழ்ப் பணியாற்றிவரும் சங்கங்களுள் அவுஸ்திரேலிய தமிழ் தாபனமும் ஒன்றாகும். இத்தாபனம் நியூ சௌத் வேல்ஸ் மாநில உயர்தர பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்றுத் தம்மை ஈன்றெடுத்த தாய்தந்தையருக்கும் மற்றும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பெருமை தேடிக்கொடுத்துவரும் மாணவ மணிகளுக்கு 1991 ஆண்டு தொடக்கம் பரிசுகள் அளித்துக் கௌரவித்துவருகின்றது. அந்த வரிசையிலே இம்மாதம் 2ஆம் திகதி "வேங்ஸ்ரவுண்" மண்டபத்தில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவிலே செல்வி நித்தியா பதஞ்சலி, செல்வன் ஆனந் நாராயன் கணேசன், செல்வன் மனு நாராயணசுவாமி ஆகிய மூன்று மாணவர்கள் மாநில பல்கலாசார, பல்லின மக்கள் விவகார அமைச்சரினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அமைச்சருடன் பல்லின மக்கள் விவகார ஆணைக் குழுத் தலைவர் திரு. கேக்கியாக்ஷரியன் அவர்களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தார். மாணவர்களுக்குப் பரிசளித்துப் பேசிய அமைச்சர் பின்வருமாறு தெரிவித்தார். இங்கு வாழ் தமிழ் மக்களின் கலை, கலாசாரம், மதிநுட்பம் ஆகியனவற்றைத் தாம் பாராட்டுவதாகவும் பல்கலாசாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அவுஸ்திரேலிய நாட்டிலே தமிழ் மக்கள் தங்கள் பழமை வாய்ந்த கலைகளையும் கலாசாரத்தையும் வளர்த்து அவுஸ்திரேலிய நாட்டிற்குப் பெருமையேற்படுத்திக் கொடுப்பதையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். தமிழ் மக்களிடையே இருக்கக் கூடிய இளஞ் சந்ததியினர் உயர் கல்வி கற்றுச் சான்றோராக ஆவதுடன் நின்றுவிடாது அரசியல் துறையிலும் தமக்குரிய பங்கை வகுத்துத் தமக்கும் தமது இனத்திற்கும் பெருமையேற்படுத்த வேண்டுமென்பதே தமது உள்ளக் கிடக்கையென அவர் மேலும் கூறினார்.

இப்பரிசளிப்பு விழாவிலே பல்வகைப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. திருமதி யோகா தணிகாசலம் அவர்கள் தயாரித்தளித்த வீணையிசை நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருந்தது. பதின்மூன்று வீணைகளைக்கொண்டு இளங்கலைஞர்கள் எழுப்பிய வீணாகானம் சபையோர் யாவரையும் கவர்வதாயிருந்தது. அடுத்து திருமதி ஆனந்தவல்லி அவர்களின் லிங்காலய நடனக் குழுவினர் வழங்கிய ஸ்ரீசிவாஸ்துதி கண்ணுக்கும் கருதுக்கும் விருந்தாக அமைந்திருந்தது. திருமதி லக்ஷ்மிராமன் குழுவினர் வழங்கிய தமிழிசை நிகழ்ச்சி சிறந்த பாடல்களைக் கொண்ட நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. ஒலியமைப்புச் சிறப்புற அமைந்திருப்பின் இந்நிகழ்ச்சி சபையோரைப் பெரிதும் கவர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கலைநிகழ்ச்சிகளுள் கவிதையுருவில் அமைந்திருந்த "ஊரென்றால் சோக்கல்லோ'' என்ற கலாநிதி வேந்தனார் இளங்கோ அவர்கள் தலைமைதாங்கி நடாத்திய பட்டிமன்றம் சபையோர் யாவரையும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சியாகக் காணப்பட்டது. புலம்பெயர்ந்து இங்கு வந்துள்ள தமிழ் மக்களில் பலர் இங்குள்ள சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு தமது ஊரை எண்ணி எண்ணி ஆசைப்பட்டுக்கொண்டிருப்பதைப் படம் பிடித்துக் காட்டுவதாகவும் 'அக்கரை மாட்டிற்கு இக்கரை பச்சை' என்ற முதுமொழியை நினைவூட்டுவதாகவும் அமைந்திருந்தன இப்பட்டிமன்றத்திலே திரு. தேவராஜன், திரு. சந்திரகாசன் ஆகியோர் வழங்கிய கவிதைகள், விழாவில் இறுதி நிகழ்ச்சியாக அக்ஷ்ஃபீல்ட் பாலர்மலர் மாணவர்கள் தயாரித்தளித்த நகைச்சுவை நாடகம் சிறப்பான முறையில் அமைந்து பலரின் பாராட்டையும் பெற்றது.

இங்கு இடம்பெற்ற ஏனைய கலை நிகழ்ச்சிகள்

தமிழ் கல்வி நிலையங்களின் கலைவிழா, மவுண்ட் றுயிட் தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம், வென்ற்வேர்த்வில் தமிழ்க் கல்வி நிலையம் ஆகியனவற்றின் ஆண்டுக் கலைவிழாக்கள் சிறப்புடன் நடந்தேறின. சிட்னியிலுள்ள தமிழ்க் கல்வி நிலையங்கள் யாவும் ஒன்றுசேர்ந்துள்ள ஒன்றியம் நடாத்திய கலைவிழாவும் சிறப்பாக அமைந்திருந்தது. தமிழ் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் தமிழ் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையும் இத்தகைய கலைவிழாக்களை ஏற்பாடு செய்து நடாத்திவரும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெரிதும் பாராட்டுக்குரியவராவர்.

# புதுமை புரிந்திடுவீர்

அ. மோகன்ராஜ்

உதயத்திற்காக மலர்ந்த மலர்கள் – பிறர்
உணர்ச்சியை மதிக்கும் மணங்கள் – அவர்
உதவிக்கே ஓடும் கரங்கள், என்றும்
உண்மைக்கே, உழைக்கும் நல் உள்ளங்கள்
எட்டுத் திசையும் கட்டி மறைக்கும்,
எடும்பன் இருட்டை பிளந்துவரும் சூரியன்கள்
வெட்டிய மின்னல் ஒளிர்க் கதிர்கள் – இவர்கள்
வீரச் செல்வங்களின் இளைப்பான இளைஞர்கள்
ஆணைகள் ஆயிரம் ஒன்றி ஆற்றல் பெற்ற,
அருந் திறல் நெஞ்சங்கள் – அந்த
வானக மங்கை வாழ்த்திடும் சிங்கங்கள்
வஞ்சமற்றே பழகிடுவர் – என்றும்
உத்தமர் காந்தியின் வழி செல்வர் – தமிழ்த் தாய்ப்
புதல்வர், நாமென்றே – நித்தமும் திடமுடன்
புதுமை புரிந்திடுவர்.

## இடமின்மை........................

எமது அன்பிற்குரிய வாசகர்களே!
கலப்பை சஞ்சிகை வெளிவர உள்ளதென்பதை அறிந்ததும், அதை தரம்மிக்கதாக்க பல அன்பர்கள் ஆக்கங்களை அனுப்பியிருந்தார்கள். எமது மனமார்ந்த நன்றி. தொடர்ந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். வாசகர்களே! தலைப்பிரசவமான இந்த இதழில் இடமின்மை காரணமாக சில ஆக்கங்கள் பிரசுரிக்கப்படவில்லை, தரமானவை என ஆசிரியர்குழு முடிவுசெய்பவை அடுத்தடுத்து வரும் இதழ்களில் வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.

பிரசுரிக்கப்படாதவைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

# ஏன் இந்த மாற்றம்?

தாயகத்தில் என்றால் என்ன, தாம் குடிபெயர்ந்து வாழும் நாடுகளில் என்றால் என்ன, தமிழர் கல்வித்துறையில் சிறந்துவிளங்குகின்றனர். இதற்கு கல்வித்திறமையும் கடினஉழைப்புமே காரணங்களாகும். அன்றொரு காலத்தில், தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழக அனுமதி பெற்றகாலம், இனரீதியான கல்வித் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தியதன்மூலம், தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகளை குறைத்தது இலங்கை அரசாங்கம் அன்று. இதனால் பாதிக்கப்பட்டோர் பலர். அவுஸ்திரேலியாவிலோ இனரீதியான கல்வித் தரப்படுத்தல் எதுவும் கிடையாது. ஆனால் அடுத்த ஆண்டுமுதல் மருத்துவக்கல்லூரிக்கான அனுமதிகளை சிட்னி பல்கலைக்கழகம் நிறுத்திவிட இருக்கின்றது. தற்பொழுது நடைமுறையில் உள்ள ஆறு வருட மருத்துவப் பட்டப்படிப்பு, 1997ம் ஆண்டிலிருந்து நான்குவருட 'பட்டதாரிகளுக்கான மருத்துவப் பட்டப்படிப்பாக' (Graduate Medical Degree) மாற்றப்படவுள்ளதே இதன் காரணமாகும்.

பெற்றோர் தமது பிள்ளைகள் படித்து ஒரு நல்ல உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. அப்படி பெற்றோர்தான் எதிர்பார்க்காவிடினும், மாணவர்களிடையே இப்படியான குறிக்கோள் வளர்வது இயற்கையே. உயர் பாடசாலைகளில், மாணவர்களிடையே நிலவும் போட்டியே முக்கிய காரணமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, மாணவர்கள் H.S.C. இல் பெறும் பெறுபேறுகள், எதிர்கால வேலைவாய்ப்பு வசதிகள் என்பனவே அவர்களது உயர்கல்வித்துறையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும். எவ்வளவுதான் போட்டிகள் இருப்பினும், தமது குறிக்கோளை அடையக்கூடியவர்கள் பலர் இங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இருக்கும் மூன்று மருத்துவக்கல்லூரிகளில் வருடாந்தம் சுமார் 430 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இதில் 210 இடங்களை சிட்னி பல்கலைக்கழகம் ஒதுக்கியிருந்தது. அனுமதி பெறும் மாணவர்களில் பெரும்பாலானோர் H.S.C. பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிப்பவர்கள். அத்துடன் பாதிக்கப்பட்டோர் அல்லது வயது முதிர்ந்தோர் (Disadvantaged or Mature Aged Applicants) என்ற அடிப்படையில் கணிசமான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. உள்நாட்டு, வெளிநாட்டுப் பட்டதாரிகளென நியு சவுத் வேல்ஸ் மாநிலத்தில், ஆண்டுதோறும் மொத்தமாக 450 மருத்துவர்கள் புதிதாகப் பயிற்சியை ஆரம்பிக்கிறார்கள். ஆயினும் இங்கு சில மருத்துவமனைகளில் (நாட்டுப்புற) மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மருத்துவர்கள் பலரும் நாட்டுப்புறங்களுக்குச் சென்று வேலை செய்ய விருப்பம் காட்டாமையே இதற்குக் காரணம்.

மேற்குறிப்பிட்ட அனுமதிமுறைகளால் வருடாந்தம், நியு சவுத் வேல்ஸில் ஏறக்குறைய ஐந்து தமிழ் மாணவர்கள் மருத்துவக்கல்லூரிகளில் அனுமதி பெறுகிறார்கள். இலங்கையிலிருந்து அண்மைக்காலங்களில் இங்கு குடியேறியவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். சிட்னி பல்கலைக்கழகத்தின் 'Broadway Scheme'மும், நியு சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக 'Access Scheme'மும் இவர்களுக்கு சலுகை

வழங்குகின்றன.

ஏன் இந்த மாற்றம்? பலரது மனதில் எழும் கேள்வி இது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, இப்பொழுது நடைமுறையிலிருக்கும் ஆறுவருட மருத்துவப்பட்டப்படிப்பு முறையில் இருக்கும் சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் நோக்குடன் புதிய நான்கு வருட பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாம். இது தற்பொழுது அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் நடைமுறையிலுள்ள பட்டப்படிப்பு முறையாகும். இப்புதிய பட்டப்படிப்பு மூலம்

- பலதரப்பட்ட மாணவர்கள் மருத்துவத் துறையில் நுழைய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் நாட்டுப்புறங்களில் பயிலும் மாணவர்களுக்கு கூடியளவ சந்தர்ப்பம் வழங்கப்படலாம்.
- திறமையும் அனுபவ முதிர்ச்சியும் உடையவர்களை மருத்துவத் துறையில் சேர்த்துக் கொள்வது சாத்தியமாகும்.

இதன் மூலம் எதிர்வரும் ஆண்டுகளில், H.S.C. இலிருந்து மருத்துவக்கல்லூரிக்கு அனுமதி பெறும் மாணவர்கள் எண்ணிக்கை ஐம்பது சதவீதமாகக் குறைக்கப்படுகிறது(அதாவது 430 ஆசனங்களில் 210 ஆசனங்கள் மட்டுமே). இது மாணவர்களிடையே பலத்த போட்டியை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் பாதிக்கப்படப்போவது தற்போது உயர்கல்வி கற்கும், மற்றும் கற்கவிருக்கும் சிறார்களே. அடுத்த இரண்டு ஆண்டுகட்கு (1995 & 1996) சிட்னி பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது. புதிய பட்டப்படிப்புக்கு 1996ம் ஆண்டு பிற்பகுதியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதுடன், 1997ம் ஆண்டு முதல்முறையாக மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். தெரிவு முறை பற்றிய முழுவிபரங்களும் அடுத்தஆண்டளவில் வெளியிடப்பட இருப்பதுடன், இதில் முக்கியமாக,

- மாணவர்கள் தமது முதற்பட்டப்படிப்பில் பெற்ற கல்வித்தகைமைகள்,
- விசேட அனுமதிப் பரீட்சையின் பெறுபேறுகள்,
- மேற்குறிப்பிட்ட இரண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் 400 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

ஆக மொத்தம் இந்த நான்குவருட பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஆகக் குறைந்தது மூன்றுவருட பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்திசெய்து பட்டம் பெற்றிருக்க வேண்டும். முதற்பட்டப்படிப்பு எந்தத் துறையாகவும் இருக்கலாம்(உ + ம் – பொறியியல், பொருளியல், விஞ்ஞானம் அல்லது கலைத்துறை). இதில் எந்த ஒன்றிற்கும் முன்னுரிமை வழங்கப்படமாட்டாது. ஆனால் புதிய பட்டப்படிப்புக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யும்முகமாக 'மருத்துவ விஞ்ஞானப்பட்டப்படிப்பு" (Bachelor of Medical Sciences) ஒன்று ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக சொல்லப் போனால், புதிய அணுகுமுறையால் பாதிப்படைவோர் – H.S.C. மாணவர்களும், குடிபெயர்ந்து இங்கு வாழும் மக்களுமேயாகும். அதேவேளை எம்மிடையே இருக்கும் பல ஊக்கமுள்ள பட்டதாரிகளும் மருத்துவத்துறைக்கு விண்ணப்பிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதுபற்றிய புதிய விபரங்களைப் பின்னர் அறியத்தருகிறோம்.


ஆவதும் பெண்ணாலே
அழிவதும் பெண்ணாலே
பெண்களைப் பொறுப்பாளிகளாக்க ஆண்களின
வாதம் தொன்று தொட்டு பெண்களை அடக்கியாள
தங்களுக்கென வழி வகுத்துக்கொண்டனர்
ஆண்வர்க்கத்தினர். அணியும் உடையிலும் பேசும்
மொழியிலும் பெண்களுக்கான அடிப்படைக்குணங்கள் என்று
அச்சம், மடம்நாணம், பயிர்பு என தன்னுடைய வடென்றும்
சிறையில் பூட்டிவைக்க ஆயுதங்கள் செய்தனர் (பொம்பிளை
சிரிச்சால் போச்சாம்) சிரிப்பதைக்கூட அமுக்கிவைத்து
விட்டனர் ஆண்கள், என்ன தவறு நடந்தாலும் அதற்கு
பெண்களையே பொறுப்பாளிகளாக்கி தங்களை
நிரபராதிகளாக்கி கொள்கிறார்கள். ஒரு பெண் கெட்டாலும்
கெடுக்கப்பட்டாலும் அதற்கு அவள்தான் காரணம், சமமாக
நடத்தவேண்டிய பெண்களை கீழ்வர்க்கத்தினராக்கி
ஆட்சிபுரிகின்றனர் (ஆண் என்று அகந்தை கொண்ட
மானிட ஜென்மங்கள்.)
நன்றி: பெண்விடுதலை நோக்கி "மங்கை"

# தமிழன் இருக்கும் வரைக்கும்

தமிழன் இருக்கும் வரைக்கும் – மண்ணில்
தமிழன் உள்ள மட்டும்
அமிழ்தின் இனிய தமிழை – உயிர்
அளித்துப் பாதுகாப்பான்.

சங்கம் வளர்த்த தமிழைத் – தன்னைத்
தமிழன் என்னும் தமிழை
எங்கும் போற்றுங் குறளைப் – பாருக்
கீந்த தமிழைக் காப்பான்.

பழைய மொழியாம் தமிழை – தெய்வப்
பாடல் மிகுந்த தமிழைத்
தழைக்கச் செய்வதன்றி – அதைச்
சாகவிடவே மாட்டேன்.

பம்பாய் டெல்லி வங்கம்–அன்றிப்
படிக்கச்செல்லும் லண்டன்
இம்மாநகரம் எங்கும்–அவன்
இனிய தமிழை வளர்ப்பான்.

ஈழநாடு மலயம் –இன்னும்
இரங்கோன் நெட்டாங் கெங்கும்
ஆழிகடந்து செலினும் –அவன்
ஆண்டும் தமிழைக் காப்பான்.

தமிழன் குருதி தமிழே – அவன்
தழைக்கும் பேச்சும் தமிழே
இமைக்கும் கண்ணும் தமிழே–அவன்
இனிய உயிரும் தமிழே.

எந்தச் சமயமதையும் – வேறே
எந்தக் கொள்கைதனையும்
இந்த நிலத்தில் கொளினும்–தமிழன்
ஈன்ற தமிழை மறவான்.

நம்மை அணைத்துக் காக்கும்– அந்த
நல்ல மொழியாம் தமிழை
இம்மாநிலத்தில் என்றும் –தமிழன்
இறக்க விடவே மாட்டான்.

ஆக்கம் அளிக்கும் தமிழை–நாட்டின்
ஆட்சி மொழியாம் தமிழை
போக்க முனைந்தால் எவரும்–தமிழன்
போரும் புரிந்து காப்பான்.

என்றும் உள்ள தமிழாய் –தமிழன்
இனிதாய் வாழ்ந்து விட்டான்
இன்பத்தமிழை உலகில்– அவன்
இருக்கும் வரைக்கும் காப்பான்.

நன்றி–பரந்தாமனார்.அ.கி.

தொகுப்பு– டாக்டர்.வே.இ.பாக்கியநாதன்.

வேண்டுமென்று........ தான் நினைத்தபடி வாழ வேண்டுமேன்று....... அவளது அழகை வாழ்க்கையைப் பார்த்து ஆட்கள் வியந்தவண்ணம்........ அப்படியெல்லாம் எதிர்பார்த்து வருபவளுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போய்விட்டால். அந்த ஏமாற்றத்தை அவள் தாங்கிக்கொள்வாளா ? பொறின் உடுப்புக்களும் ...... வாழ்க்கையும், கொலிடேக்குப்போய் நின்றால் சொந்தக்காரர்கள் எல்லோரும் ஆவென்று வாயைத்திறந்து பார்ப்பதில் கிடைக்கும் போலியான சுகமும் ........ என்னைப்போலவே உன்னையும் மயக்கவேண்டாம் சாரு....... இந்த அவுஸ்ரேலியாவில் ..... இன்னொரு பிரதுஷ்பும் ஷணாவும் உருவாக போல் பேசி பிரதுஷ்பை நோகடிப்பான். கொஞ்சிக்கொஞ்சி பாசமழை பொழிந்த அப்பா.... எல்லாம் அவர்கள் வரையில் கனவாகி... குடித்துவிட்டு சதா படுத்திருக்கும் அப்பாதான் நிஜமாகிப்போனார். அவர்களுக்கு பிரதுஷ்பை பிடிக்கவேயில்லை. ஷ டோன்ட் வேக்..... வேண்டாம்.........

(யாவும் கற்பனை)

கலப்பை கொண்டு தமிழ்
வளர்க்கும் சிட்னி பல்கலைக்கழக
தமிழ் சங்கத்திற்கு எமது வாழ்த்துக்கள்

**SriLankan Food Bar**

42, Burlington Road,
Homebush -2140.
**Tel : 746 5283.**




**"Abirami Entertainment"**

உங்களுக்குத் தேவையான தமிழ் தெய்வீகப்பாடல்களை
**C.D. இசைத்தட்டுக்களில்**
பெற்றுக்கொள்ளலாம்.
**Tel.& Fax :(02) 748 4901**
**Or 018 492 614**


- என்ன புதிசா தமிழ் அகராதியோட திரியிறீர்? புலவரா வாற எண்ணம் ஏதேனுமோ?

- தெரியாதே, சிட்னியில புதுக்கலப்பையொண்டு வந்திருக்கெல்லே, படிக்கவேணாமே?



# நூலின் சிறப்பு

விலைகொடுத்து ஓர் மனிதன் பெற்ற நூலை
விரித்துப் பார்த்தார்கள், படித்திட்டார்கள்
இலையென்று கூறாதே அவனுந்தந்தான்
எடுத்தவரெல்லாம் படித்துத் திருப்பித்தந்தார்
நிலைபெற்றுவிட்டதந்த நூலின் செல்வம்
நங்காது நின்றவர் அனைவருள்ளும்
விலைகொடுத்தே நூல்பெற்றான் எழுத்துக்கெல்லாம்
விலைகொடுக்க முடியாமல் திகைக்கலானான்

எல்லேரும் உண்டார்கள் கல்விச்செல்வம்
எடுத்தெடுத்துப் பார்த்தார்கள் பன்னாள் -ஆனால்
சொல்லொன்றும் குறையவில்லை அன்னூல்-தன்னில்
சுவைத்துவிட்டு வைத்ததனால் எச்சிற்காணோம்
நல்லதொரு நூலதனை பொருளால் வாங்கி
தன்னுரிமை கொண்டுவிட்டான்! அதனுள் வாழும்
கல்விதனை யொருவனுக்கே உரிமை செய்து
கைப்பிடியிலே மறைக்கக் கற்றானில்லை


நன்றி–முத்துக்கண்ணன்

# KAVITHA VIDEOS

WEDDINGS, BIRTHDAY PARTIES
AND ANY SORT OF CEREMONIES
WE WILL DO YOUR
PHOTOGRAPHY AND VIDEO

ALL OF YOUR CEREMONY CARDS CAN
BE PRINTED IN TAMIL AND ENGLISH

PHONE 744 3039 Mobile 015 202668




காதுக்கினிய பழைய, புதிய தமிழ் சினிமாப்பாடல்களை
சிறந்த தரத்துடனும் நியாயவிலையிலும் C.D. இசைத்தட்டுக்களில்
பெற்றுக்கொள்ளத் தொடர்பு கொள்ளுங்கள்

லிங்கம்
02 - 746 0384

# K.S.K Computers

COMPUTER UPGRADING
MULTIMEDIA UPGRADING
BUYING A NEW COMPUTER
ANY HARDWARE OR SOFTWARE
Please call kumar
on 6235088
All parts and work are guranteed


*Printed by Prints R Us Tel: 793-7481*

SYDNEY UNIVERSITY TAMIL SOCIETY

கலப்பை